# பரிபூரண ஜீவன்

# PARIPOORANA JEEVAN



## இயேசு சீக்கிரம் வருகிறார்.

## அவரை சந்திக்க

## நீங்கள் ஆயத்தமா?

TAMILNADU ASSEMBLIES OF GOD NEWS MAGAZINE

May - June 2020
Volume : 60

ஆண்டு சந்தா ₹ 100/-
Issue : 3



## ஆசிரியரிடமிருந்து........!

# இயேசு கிறிஸ்துவின் வருகைக்கான அடையாளங்களும் அவருடைய வருகைக்கு ஆயத்தப்படுதலும்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, இரட்சகர் இயேசுவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். கர்த்தருடைய செட்டைகளின் நிழலிலே பாதுகாப்பாக இருப்பீர்கள் என்று நம்புகிறேன். இந்த சவாலான நாட்களிலே நாம் உள்ளம் சோர்ந்து போகாமல், இத்தகைய நிகழ்வுகள் மூலமாக கர்த்தர் நமக்கு உணர்த்த விரும்பும் காரியம் என்ன என்பது குறித்து சிந்தித்து செயல்பட வேண்டும். “எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று” என்று வேதம் கூறுகிறது (1பேதுரு4:7). “நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள்'' (மத்தேயு 24:44) என்று இயேசு முன்னுரைத்திருக்கிறார். மத்தேயு 24:7,8ம் வசனங்களில் வாசிப்பது போல இன்று நடைபெறும் சம்பவங்கள் கடைசி காலத்தின் அடையாளங்களாக இருக்கின்றன.

இச்செய்தியிலே நாம் இயேசு கிறிஸ்துவினுடைய வருகைக்கான அடையாளங்கள் என்ன என்பதைப் பற்றியும், அவருடைய வருகைக்கு நாம் எப்படி ஆயத்தப்படுவது என்பது பற்றியும் சற்று தியானிப்போம்.

## இயேசுவின் வருகைக்கான அடையாளங்கள்
## Signs of His Coming

வேதத்தின் அடிப்படையிலே இயேசுவின் வருகைக்கான அடையாளங்களை நாம் மூன்று இடங்களில் காணலாம். அவை சபை, உலகம் மற்றும் யூதர்கள்.

### 1. சபைக்குள்ளாக காணப்படும் அடையாளங்கள்
### Ecclesiastical Signs

**(I).கள்ளத்தீர்க்கதரிசிகள்**

இவர்களைக் குறித்து இயேசு மத்தேயு 24:24 வசனத்திலும், பவுல் 2 தீமோத்தேயு 4:4 வசனத்திலும் எச்சரிக்கின்றனர். இன்று அநேக துர் உபதேசங்களையும், வேத புரட்டுகளையும், பொய்யான அற்புதங் களையும், தரிசனங்களையும், தவறான வேத வியாக்கியானங்களையும் பேசி மக்களை குழப்புகிறவர்கள் பெருகி விட்டார்கள் என்பதை நாம் அறிவோம். இத்தகையோருக்கு நாம் விலகி எச்சரிக்கையாய் இருப்போமாக.

**(II). ஆவிக்குரிய வெதுவெதுப்பு**

இது ஒரு அனலும் இல்லாத குளிரும் இல்லாத நிலை. வெளிப்படுத்தின விசேஷம் 3:15-ல் பரிசுத்த ஆவியானவர் இந்த

நிலையைக் குறித்து கண்டித்து, கடிந்து கொள்கிறார். இயேசு முன்னுரைத்தது போல இன்று சபைகளிலே அன்பு தனிந்த நிலை காணப்படுகிறது (மத்தேயு 24:12). தேவ பிள்ளைகள் மத்தியிலே காணப்படும் ஜெபக்குறைவு, வேத வாசிப்பில் ஆர்வமின்மை, ஆத்தும பாரமின்மை, ஆவிக்குரிய அலட்சியப் போக்குகள், நிர்விசாரம், உலக சிநேகம் அனைத்தும் அவரது வருகைக்கான அடையாளங்களாக இருக்கிறது (2 தீமோத்தேயு 3:5).

### (III). விசுவாச துரோகம்

இது சத்தியத்தை மறுதலிக்கிற சுபாவம். சபைகளிலே இன்று பரிசுத்த ஆவியானவரின் அற்புதங்களையும், அசைவாடுதலையும் நம்பாமல் அவைகளை மறுக்கும் சுபாவம் காணப்படுகிறது. இரட்சிப்புக்கு இயேசு மட்டும் தான் வழி என்ற உணர்வும் மங்கி வருகிறது. இதைக் குறித்து "மனுஷகுமாரன் வரும்போது விசுவாசத்தைக் காண்பாரோ?" என்று இயேசு துக்கத்துடன் அங்கலாய்க்கிறார் (லூக்கா 18:8).

### (IV). உபத்திரவங்கள்

இன்று இயேசுவின் மேல் வைத்த விசுவாசத்தின் காரணமாக ஊழியர்களும், சபைகளும், கிறிஸ்தவர்களும் பலவிதமாக உபத்திரவங்கள் அனுபவிக்கிறதை நாம் அறிவோம். இதை அவரது வருகையின் அடையாளங்களில் ஒன்றாக இயேசு முன்னுரைத்திருக்கிறார் (மத்தேயு 24:9).

### (V). சுவிசேஷமயமாக்கப்படுதல்

"இராஜ்ஜியத்தினுடைய இந்த சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும். அப்போது முடிவு வரும்" என்று இயேசு கூறியுள்ளார் (மத்தேயு 24:14). இன்று பல்வேறு சமூக ஊடகங்கள், இணையதளங்கள், பத்திரிக்கைகள் மற்றும் பற்பல ஊழியங்கள் வாயிலாக நற்செய்தி உலகம் முழுவதிலும் அறிவிக்கப்பட்டு வருகிறது.

## 2. உலகத்தில் காணப்படும் அடையாளங்கள்
## Global Signs

### (I). பாவத்தின் பெருக்கம்

கடைசி காலத்தில் அக்கிரமம் மிகுதியாகும் என்று வேதம் கூறுகிறது (மத்.24:12). கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வரும் என்றும், மனிதர்கள் பணப்பிரியராயும், பரிசுத்தமின்றியும், கொடுமை உள்ளவர்களாய், சுகபோகப் பிரியராய் இருப்பார்கள் என்று பவுல் கூறுகிறார் (2 தீமோ 3:1-5). இன்று கொலை, விபச்சாரம், குடிவெறி, கற்பழிப்பு, கருக்கலைப்பு, ஓரினச்சேர்க்கை போன்ற கொடிய பாவங்கள் மனிதரிடையே மலிந்து கிடப்பதை பார்க்கிறோம். கடைசி காலங்களில் நோவா மற்றும் லோத்துவின் நாட்களில் நடந்தது போலவே காரியங்கள் நடக்கும் என்று இயேசு கூறியதை நினைவு கூறுவோமாக (லூக்கா 17:26-29).

### (II). அறிவு பெருக்கம்

தானியேல் 12:5-ல் இதைக் குறித்து வாசிக்கிறோம். அறிவு பெருக்கத்தைக் குறித்து ஒரு புள்ளி விவரம் பின்வருமாறு கூறுகிறது.

நோவா காலம் முதல் கிபி 1800 வரை - 1 மடங்கு அறிவு பெருக்கம்

கிபி 1800 -1900 (100 ஆண்டுகள்) - 2 மடங்கு அறிவு பெருக்கம்

கிபி 1900 – 1950 (50 ஆண்டுகள்) – 2 மடங்கு அறிவு பெருக்கம்

கிபி 1950 க்கு பிறகு 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை இரண்டு மடங்கு அறிவு பெருக்கம் ஏற்படுகிறது. இன்று மருத்துவம், விஞ்ஞானம், கணினி துறைகளில் உள்ள அறிவு பெருக்கம் நாம் அறியாததல்லவே.

**(III) யுத்தங்கள்**

கடைசி காலங்களிலே யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள் என்று இயேசு சொல்லியிருக்கிறாரே (மத்.24:6). உலக நாடுகளிடையே சமாதானத்தை வலுப்படுத்தும் நோக்குடன் 1945 ஆம் ஆண்டு "ஐக்கிய நாடுகள் சபை" (UNO) நிறுவப்பட்டது. யுத்தங்கள் நிகழாது என்ற எதிர்பார்ப்பிற்கு மாறாக 30க்கும் அதிகமான யுத்தங்கள் நடந்தன என்று சரித்திரம் கூறுகிறது. இன்றும் அநேக உள்நாட்டுப் போர்களும், இரசாயன அணு ஆயுதங்களின் பிரயோகமும் மிகவும் அதிகரித்துள்ளது.

**(IV) பூமியதிர்ச்சி, பஞ்சம், கொள்ளை நோய்கள்**

அடுத்ததாக மத்தேயு 24:7ல் பஞ்சங்களும், கொள்ளை நோய்களும், பூமி அதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும் என்று இயேசு கூறுகிறார். இந்த நூற்றாண்டில் மட்டும் ரிக்டர் அளவில் 6.5க்கும் அதிகமான50க்கும் மேற்பட்ட பூமி அதிர்ச்சிகள் நிகழ்ந்துள்ளன; மேலும் யுத்தங்களை தொடர்ந்த கடுமையான பஞ்சங்கள்; மற்றும் கொரோனா, எய்ட்ஸ், சார்ஸ் போன்ற கொடிய கொள்ளை நோய்கள்; இவற்றால் மரித்த மக்கள் திரள் ஏராளம். இவை அனைத்தும் இயேசுவின் வருகை மிக சமீபம் என்பதை நமக்கு சுட்டிக்காட்டும் உலகத்தில் காணப்படும் அடையாளங்கள் ஆகும்.

## 3. யூதர்கள் மத்தியில் காணப்படும் அடையாளங்கள்
## Jewish Signs

லூக்கா 21–ம் அதிகாரம் 29 ஆம் வசனத்தில், இயேசு அத்திமரம் துளிர்த்தலை பற்றியதான ஒரு உவமையைக் கூறுகிறார். இவ்வுவமையில் அத்திமரம் என்பது யூதர்களைக் குறிக்கிறது. கிபி 70ஆம் ஆண்டிற்குப் பின் யூதர்கள் உலகமெங்கும் சிதறடிக்கப்பட்டார்கள். யூதர்களுக்கென்று ஒரு தேசம் பல நூற்றாண்டுகளாக இல்லாதிருந்தது. 1948 மே 15–ல் தான் இஸ்ரவேல் தேசம் யூதர்களுக்கென்று தரப்பட்டது. அதுமுதல் ஏசாயா 11:11,12லும், எரேமியா 23:3,8லும் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டபடியே பூமியின் நான்கு திசைகளிலும் இருந்து யூதர்கள் இஸ்ரவேல் தேசத்தில் வந்து குடியேறினர். இன்று சுமார் 61 லட்சம் யூதர்கள் இஸ்ரவேல் தேசத்தில்இருக்கிறார்கள். இந்த அடையாளங்கள் ஆண்டவராகிய இயேசு வாசற்படியில் நிற்கிறார் என்பதை நமக்கு உணர்த்துகிறது.

இப்படியாக, வருகைக்கான அடையாளங்களைக் குறித்து அறிந்த நாம் இயேசுவின் வருகைக்காக ஆயத்தப்படுவது எப்படி என்பதையும் அறிந்திருக்க வேண்டும். வேதாகமம் முழுவதும் 1845 வசனங்கள் இயேசுவின் வருகையைப் பற்றி தெரிவிக்கின்றன. புதிய ஏற்பாட்டில் மட்டும் இயேசுவின் வருகையைப் பற்றி கூறும் 318 வசனங்கள் உள்ளன. தொடர்ந்து இயேசுவின் வருகைக்கு ஆயத்தப்படுவது எப்படி என்று தியானிப்போம்.

# இயேசுவின் வருகைக்கு ஆயத்தப்படுவது எப்படி?
# How to prepare ourselves for His coming?

### 1. சுத்திகரித்துக் கொள்ளுங்கள்:
### Purify Yourself

இயேசு கிறிஸ்து மீண்டும் வருவார் என்று விசுவாசித்து காத்திருக்கிற ஒவ்வொருவரும் தங்களை சுத்திகரித்து கொள்வார்கள் என்று வேதம் கூறுகிறது (1 யோவான் 3:2,3). “காலம் சமீபமாயிருக்கிறது; நீதி செய்கிறவன் இன்னும் நீதி செய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தம் ஆகட்டும்” என்று இயேசு கூறுகிறார் (வெளி.22:11). நமது பரிசுத்தம் எப்படி இருக்கிறது? சங்கீதம் 15:1-5 வசனங்கள் நாம் எப்படி பரிசுத்தமாய் வாழ வேண்டும் என்று கற்பிக்கிறது. 1 கொரிந்தியர் 6:9,10 வசனங்கள் பல்வேறு பாவங்களை பட்டியலிட்டு, பாவிகள் தேவ ராஜ்யத்தை சுதந்தரிப்பது இல்லை என்று எச்சரிக்கிறது. பரிசுத்தமில்லாமல் ஒருவரும் கர்த்தரை தரிசிப்பது இல்லை என்பதே வேதத்தின் உறுதியான முழக்கம் (எபிரெயர் 12:14). பொல்லாத மனிதர்களின் மத்தியிலே நீதிமானாக, உத்தமனாக வாழ்ந்து தன் பரிசுத்தத்தை காத்துக் கொண்ட நோவாவைப் போல நாமும் பரிசுத்தத்தில் உறுதியாய் நிற்போமாக (ஆதியாகமம் 6:8, 9). “யெகோவா மெக்காதீஸ்” என்னும் நாமமுள்ள, நம்மை பரிசுத்தமாக்கும் கர்த்தரிடம் உதவி பெற்று பரிசுத்தமாக வாழ்வோமாக.

### 2. விழித்திருந்து ஜெபியுங்கள்:
### Pray with Watchfulness

இச்செய்தியின் துவக்கத்தில் பார்த்தபடி “எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று; ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து ஜெபம் பண்ணுகிறதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருங்கள்'' என்ற பேதுருவின் வார்த்தைகளை நினைவுகூறுவோம் (1 பேதுரு 4:7). இயேசுவும் தமது வருகைக்கான அடையாளங்களை சொல்லிவிட்டு, “மனுஷகுமாரன் முன்பாக நிற்க பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள்” (லூக்கா 21:36) என்று கூறுகிறார். விழிப்பாக இருந்து ஜெபிக்க வேண்டியதன் அவசியத்தை, இயேசு மீண்டும் மீண்டுமாக வலியுறுத்துவதை மாற்கு 14:37,38 மற்றும் மாற்கு 13:33-37 ஆகிய வசனங்களில் காணலாம். தானியேலைப் போலவும் (தானியேல் 6:10), தாவீதைப் போலவும் (சங்கீதம் 55:17) நாம் ஜெபிக்க வேண்டும். பவுல் கூறுவதை போல இடைவிடாமல் ஜெபிக்கவேண்டும் (1தெசலோனிக்கேயர் 5:17). நாம் நமக்காக மட்டும் சுயநலமாக ஜெபிக்காமல் அனைவருக்காகவும் ஜெபிக்கவேண்டும் (எபேசியர் 6:18). வருகைக்கான மிக முக்கிய ஆயத்தங்களில் ஒன்று ஜெபம். கிறிஸ்தவ வாழ்வின் அச்சாணி ஜெபம். தினமும் ஒரு மணி நேரம் கூட நம்மால் ஜெபிக்க முடியாது என்றால், எப்படி நித்திய காலமாக தேவ பிரசன்னத்தில் வாழமுடியும்? ஜெபமின்றி ஜெயமில்லை; நித்திய வாழ்வில்லை.

### 3. சுவிசேஷத்தை அறிவியுங்கள் :
### Proclaim the Good news

சுவிசேஷத்தை நாம் பிறருக்கு அறிவிக்காமல் கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தமாக முடியாது.எல்லோருக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, அனைவரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே கர்த்தர் தமது வருகையை குறித்து பொறுமையாய் காத்துக் கொண்டிருக்கிறார் (2 பேதுரு 3:9) என்று வேதம் கூறுகிறது. “இராஜ்ஜியத்தினுடைய இந்த சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும்; அப்போது முடிவு வரும்” (மத்தேயு 24:14) என்று இயேசுவும் கூறியிருக்கிறார். நாம் சுவிசேஷம் அறிவிக்க தவறினால், உலகம் தனது தத்துவங்களையும், மாயையான வேதாந்தங்களையும் மக்களுக்கு போதித்து மோசம் போக்க தயாராக இருக்கிறது; இதை உணர்ந்தவர்களாய் நாம் முழுமூச்சாக சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும். நோவா 120 வருடங்களாக தொய்வின்றி தொடர்ந்து நீதியை பிரசங்கித்தார் (2பேதுரு2:5). பவுல் சுவிசேஷத்தை குறித்து வெட்கப்படாமல் அனைவருக்கும் நற்செய்தி அறிவித்தார் (ரோமர் 1:16). நாமும் சுவிசேஷத்தை குறித்து

வெட்கப்படாமல் பிறருக்கு அதை அறிவிக்கும்போது, இயேசுவும், நம்மைக் குறித்து பிதாவுக்கு முன்பாக சாட்சி கொடுப்பார் (மத்தேயு 10:32,33). சுவிசேஷம் மட்டுமே இவ்வுலகிற்கு நற்செய்தி; நம்பிக்கையின்செய்தி. இந்த அடைப்பட்ட நாட்களிலும் கூட நம் ஆண்டவருடைய விடுதலையின் நற்செய்தியை உங்களது உற்றார்,உறவினர், நண்பர்களுக்கு உங்களுடைய அலைபேசியின் வாயிலாக அறிவியுங்கள்.

### 4. அன்பிலே நடந்து கொள்ளுங்கள்:
### Practice Love

அன்பு தணிந்து போன இந்த கடைசி நாட்களிலே வாழ்கின்ற நாம், "நம்மை அன்பிலே காத்துக் கொள்ளவேண்டும்" என்று வேதம் கற்பிக்கிறது (யூதா 21). நம்முடைய அன்பு எப்படி இருக்க வேண்டும்? அது மாயமற்றதாய் இருக்க வேண்டும் (ரோமர் 12:9,10). 'சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூறுங்கள்' என்று வேதம் கூறுகிறது (1 பேதுரு 1:22;4:8). மேலும் நாம் 'வசனத்தினாலும், நாவினாலுமல்ல, கிரியையினாலும், உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்' என்று வேதம் அறிவுறுத்துகிறது (1 யோவான் 3:18). அன்பு என்பது ஒரு செயல். அது வெறும் வார்த்தை அல்ல. 'ஒருவர் பாரத்தை ஒருவர் சுமப்பதே அன்பு' (கலாத்தியர் 6:2). 'மன்னிப்பது அன்பு' (எபேசியர் 4:32). 'அன்பு திரளான பாவங்களை மூடும்' (நீதிமொழிகள் 10:12; 1பேதுரு 4:8). மத்தேயு 24:34-36-ல் இயேசு கூறியிருப்பதைப்போல நாம் எளியவர்கள், சிறுமைப்பட்டவர்கள், தனிமை மற்றும் நோயில் வாடுபவர்கள், உதவியற்றவர்கள் ஆகியவர்களுக்கு நமது அன்பு மிகுந்த செயல்கள் மூலமாக உதவியையும், நம்பிக்கையையும், ஆறுதலையும் அளிக்கவேண்டும். தேவன் இப்படிப்பட்ட அன்பைத்தான் அங்கீகரிக்கிறார். "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; அதினால் நீங்கள் என் சீஷர்கள் என்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள்" என்று இயேசு கூறுகிறார் (யோவான் 13:34,35). ஆகவே 'நல்ல சமாரியன்' போன்ற நற்சாட்சியுள்ள வாழ்வே அன்பின் உன்னத வெளிப்பாடாகும்.

### 5.விசுவாசத்தில் உறுதியாய் இருங்கள்:
### Persevere in Faith

கடைசி காலத்தில் கொடிய வஞ்சகமுள்ள மனசாட்சியற்ற பொய்யர்கள், பலரது விசுவாசத்தைக் கெடுப்பார்கள் என்று வேதம் நம்மை எச்சரிக்கின்றது (1 தீமோ. 4:1). ஆகவே நாம் தெளிந்த புத்தியுடனும், விழிப்புடனும், விசுவாசத்தில் உறுதியாய் இருந்து, பிசாசுக்கு எதிர்த்து நிற்க வேண்டும் என்று பேதுருவின் நிருபத்தில் வாசிக்கிறோம் (1 பேதுரு 5:8,9). பிசாசு தனக்கு

கொஞ்சம் காலம் மாத்திரம் உண்டென்று அறிந்து அநேகரை விசுவாசத்தினின்று வழுவி போகச் செய்ய முனைகிறான். ஆனால் நாமோ அவனை இயேசுவின் இரத்தத்தினாலும், சாட்சியின் வசனத்தினாலும் மேற்கொண்டு, நம் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருக்கவேண்டும் (வெளி.12:11,12). நமது விசுவாசம் பரீட்சிக்கப்படும் (1 பேதுரு 1:7). ஆனால் நாமோ சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ போல விசுவாசத்தில் உறுதியாய் நிற்க வேண்டும் (தானி. 3:18). நாம் விசுவாசத்திற்காக தைரியமாய் போராட வேண்டுவது அவசியம் என்று யூதா நிருபத்தில் வாசிக்கிறோம் (யூதா 3). உபத்திரவத்தின் மத்தியில் நாம் அவர் என்னை கொன்று போட்டாலும் அவர் மேல் நம்பிக்கையாய் இருப்பேன் என்று யோபுவை போன்று விசுவாச அறிக்கை செய்யவேண்டும் (யோபு 13:15). கடைசியாக "யாரும், எதுவும், இயேசுவின் அன்பை விட்டு என்னை பிரிக்க முடியாது" என்ற விசுவாசத்தின் நிச்சயமும், வைராக்கியமும் பவுலை போன்று நமக்குள் இருக்க வேண்டும் (ரோமர் 8:36-39).

பிரியமானவர்களே, இந்த தியானம் உங்களுக்கு தெளிவையும், உற்சாகத்தையும், தைரியத்தையும் ஏற்படுத்தி இருக்கும் என்று விசுவாசிக்கிறேன். விழிப்பாயிருங்கள்; ஆயத்தமாய் இருங்கள். மாரநாதா! ஆமென். கர்த்தராகிய இயேசுவே வாரும். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடும் இருப்பதாக

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மூத்த போதகர், சிட்டி ரிவைவல் ஏ.ஜி. சர்ச், திருச்சி



# ஆதி சபையிலிருந்து கற்றுக்கொள்வோம்

Rev. P.S. ராஜமணி
இயக்குநர் - அகில இந்திய விஷன் 2020

## 9. சபைகளில் தியாக மனப்பான்மை இருந்தது

தொடர்ச்சி

**அன்று**

விசுவாசிகளும், போதகர்களும் தியாக மனப்பான்மையுடன் நடந்து கொண்டனர். தங்களுக்கு என்ன கிடைக்கும் என்பதில் கவனம் செலுத்தாமல் கர்த்தருக்காக என்னென்ன தியாகம் செய்யலாம் என்று யோசித்து செயல்பட்டனர்.

காணியாட்சிகளையும், ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவருக்கும் தேவையானதற்குத் தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள் (அப். 6:4).

நிலங்களையும், வீடுகளையும் உடையவர்கள் அவைகளை விற்று, விற்கப்பட்டவைகளின் கிரயத்தைக் கொண்டு வந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தார்கள். அவனவனுக்குத் தேவையானதற்குத்தக்கதாய் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை (அப்.4:34,35).

தங்கள் சொத்துக்களையும், நிலங்களையும், வீடுகளையும் விற்று ஊழியத்திற்குக் கொடுத்தனர். தேவ அன்பினால் அவர்கள் உள்ளம் நிரப்பப்பட்டிருந்தது.

ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை; சகலமும் அவர்களுக்கு பொதுவாயிருந்தது (அப். 4:32).

தனக்குள்ளதை தன்னுடையதென்று சொல்வதில் தவறு ஏதுமில்லை. ஆனாலும் அப்படிச் சொன்ன மற்றவர்கள் அதில் பயனடைய தயங்குவார்கள் என்று உணர்ந்து எல்லாமே எல்லாருக்கும் உரியதுதான் என்று சொன்னார்கள். எவ்வளவு பெரிய தியாக மனப்பான்மை என்று பாருங்கள்.

அப்பொழுது சீஷரில் அவரவர் தங்கள் தங்கள் திராணிக்குத்தக்கதாக யூதேயாவில் குடியிருக்கிற சகோதரருக்கு உதவியாகப் பணஞ் சேகரித்து அனுப்ப வேண்டுமென்று தீர்மானம் பண்ணினார்கள்.

அப்படியே அவர்கள் சேகரித்து பர்னபா சவுல் என்பவர்களுடைய கையிலே கொடுத்து, மூப்பரிடத்திற்கு அனுப்பினார்கள் (அப். 11:29,30).

தியாகம் பண்ணி பிற சபைகளுக்கும் தாராளமாய் கொடுத்தார்கள். மற்ற சபைகளில் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அதிக கவனம் செலுத்தினார்கள். இதுபோலவே அப்போஸ்தலரும் தியாகிகளாக இருந்தனர்.

ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ, அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய

கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக தனக்கு லாபமாயிருந்த எல்லாவற்றையும் நஷ்டமென்றுவிட்டார்.

ஒருவனுடைய வெள்ளியையாகிலும், பொன்னையாகிலும் வஸ்திரத்தையாகிலும் நான் இச்சிக்கவில்லை.

நீங்கள் அறிந்திருக்கிறபடி, எனக்கும், என்னுடனே கூட இருந்தவர்களுக்கும் வேண்டியவைகளுக்காக இந்தக் கைகளே வேலை செய்தது.

இப்படி பிரயாசப்பட்டு, பலவீனரைத் தாங்கவும், வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டுமென்று எல்லாவிதத்திலேயும் உங்களுக்கு காண்பித்தேன் என்றான் (அப். 20:33-35).

நான் உங்களோடிருந்து குறைவுபட்டபோதும், ஒருவரையும் நான் வருத்தப்படுத்தவில்லை; மக்கெதோனியாவிலிருந்து வந்த சகோதரர் என் குறைவை நிறைவாக்கினார்கள்; எவ்விதத்திலேயும் உங்களுக்குப் பாரமாயிராதபடிக்கு ஜாக்கிரதையாயிருந்தேன், இனிமேலும் ஜாக்கிரதையாயிருப்பேன் (2கொரி. 11:9).

நான் உங்களுடையதையல்ல, உங்களையே தேடுகிறேன் (2கொரி. 12:14).

நான் உங்கள் ஆத்துமாக்களுக்காகச் செலவுபண்ணவும் செலவு பண்ணப்படவும் விரும்புகிறேன் (2 கொரி. 12:15).

நான் உங்களிடத்திற்கு அனுப்பினவர்களில் எவன் மூலமாவது உங்களிடத்தில் பொழிவைத் தேடினதுண்டா?

இதுவே பவுலின் சாட்சி, இதுவே ஆதி நாட்களில் ஊழியம் செய்தவர்களின் சாட்சி.

## இராக்லாந்து மிஷனரி (1815-1858)

சிவகாசியை மையமாகக் கொண்டு ஊழியம் செய்து மரித்தவர் இராக்லாந்து என்ற இங்கிலாந்து நாட்டு வாலிபர். பெரிய பிரபு குடும்பத்தில் பிறந்த இராக்லாந்து கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் உயரிய பட்டப் படிப்பை முடித்து இந்தியா வந்து ஊழியம் செய்தார். எத்தனையோ பாடுகளையும், கஷ்டங்களையும் பட்டினியையும் சந்தித்து ஊழியம் செய்தார். கந்தையான உடை அணிந்து, கல்லடிபட்டு, ஒரு வாய் கூழுக்கு கையேந்தும் நிலைக்குள்ளானார். காண்போரின் நெஞ்சைக் கல்லாக்கும் இந்நிலை கண்டு கனிந்துருகும் பெண்கள் சிலரோ தம் வீட்டுச் சட்டியில் அவருக்கு கூழ் ஊற்றித் தர தயங்கி எட்டி நின்றபோது, அந்தக் கூழுக்காகத் தன் தொப்பியை நீட்டினார் இராக்லாந்து, என்று நான் வாசித்தபோது என் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது. எவ்வளவு பெரிய தியாகம் செய்தார் இவர்!.

43-வது வயதிலேயே தேவனுடைய சமுகத்திற்குப் போய்விட்டார்.

## தமிழ் வேதாகமத்தை நமக்குத் தந்த சீகன்பால்கு (1683-1719)

இன்று நமது கரங்களிலே தமிழ் வேதாகமத்தை வைத்திருக்கிறோம் என்றால் அதற்குக் காரணம் ஜெர்மன் நாட்டு வாலிபரான சீகன்பால்குதான். 24 வயதில் தரங்கம்பாடி வந்து தரையில் உட்கார்ந்து மணலில் தன் விரல்களால் எழுதி தமிழ் கற்று, வேதாகமத்தை தமிழில் மொழி பெயர்த்தார். இந்தியாவிலேயே முதன் முதலாக வேதாகமம் மொழி பெயர்க்கப்பட்டது தமிழில்தான். இந்த பரிசுத்தவான் பண்ணின தியாகம் பெரிது.

கப்பல் மூலம் வரும் தபாலில் தங்களுக்குக் பணம் வரும் என்று காத்திருந்தார் சீகன்பால்கு. டென்மார்க் அரசன் அனுப்பிய பணம் ரூ.3000 கப்பல் மூலம் வந்தது. ஆனால் கப்பல் மாலுமி குடித்து வெறித்த நிலையில் பணப்பெட்டியை பத்திரமாக படகில் ஏற்றத் தவறியதால் பணப்பெட்டி தண்ணீரில் விழுந்து மூழ்கியது. அதைத் தேடுவதில் ஈடுபட்ட 7 கப்பல் ஆட்களும் மூழ்கி இறந்தனர். மற்றொரு கப்பலில் வந்த பணமும் கைக்குக் கிடைக்கவில்லை. அந்தக் கப்பல் ஒரு பாறையில் மோதி உடைந்ததால், மறுபடியும் தாய்நாட்டிற்கே அனுப்பப்பட்டது. இப்படி எவ்வளவோ தியாகம் பண்ணி ஊழியம் செய்தார். தனது 36-வது வயதிலேயே மரித்தார்.

### வில்லியம் கேரி

நவீன கால மிஷனரிகளின் தந்தை என்று அழைக்கப்படும் வில்லியம் கேரி எவ்வளவு தியாகம் செய்து கல்கத்தா பகுதியில் ஊழியம் செய்தார் என்று சரித்திரம் கூறுகிறது. ஓர் சிறந்த மேதை. ஆனாலும் சாப்பாட்டிற்குக் கூட வழியில்லாமல் பட்டினி கிடந்து ஊழியம் செய்தார்.

### இன்று

இன்றும் தியாகத்தோடு ஊழியம் செய்கின்ற போதகர்களும் உண்டு. தியாகம் பண்ணிக் கொடுக்கின்ற விசுவாசிகளும் ஏராளம் உண்டு. ஆனால் பொதுவாக தியாக மனப்பான்மை சபைகளில் வெகுவாகக் குறைந்துவிட்டது. ஊழியம் செய்கின்றவர்களில் அநேகர் தங்களுக்கு என்ன கிடைக்கும் என்பதில் கவனமாக இருக்கின்றனர். வெளிநாடுகளிலிருந்தும், உள்நாட்டிலிருந்தும் ஏராளம் பணம் ஊழியத்திற்குக் கொடுக்கப்படுகிறது. இவைகளைக் கொண்டு தங்கள் வசதிகளைப் பெருக்குவதில் கவனமாக இருக்கின்றனர்.

கர்த்தரை நம்பி ஏராளமாய் பெற்று வசதியாக வாழ். பாடு, கஷ்டம் ஒன்றும் நீ அனுபவிக்க வேண்டியதில்லை. நீ ராஜாவின் வீட்டுப் பிள்ளைபோல் வாழவே கர்த்தர் விரும்புகிறார் என்று ஆடம்பர வாழ்க்கையை விளம்பரப்படுத்தும் மலிவான செய்திகள் பெருகி விட்டன. இதனால் தியாகம் என்ன விலை என்று கேட்கும் நிலை வந்துவிட்டது.

வேதாகமக் கல்லூரி படிப்பை முடித்து ஊழியத்திற்குள் பிரவேசிக்கும்போதே இந்த மனநிலை இருப்பதை இளம் ஊழியர்களின் பெரும்பாலோரிடம் காண்கிறோம். ஊழியம் வியாபாரமாக மாறிவிட்டது. முதலைப் போட்டு லாபம் பெருக்கும் தொழிலாக இருக்கின்றது. இதனால்தான் சபைகளில் எழுப்புதல் இல்லை என்பது மட்டுமல்ல, சபைகள் ஆவிக்குரிய நிலையில் செத்துக் கொண்டிருக்கிறது.

- தொடரும்

---

## ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள், எனவே உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ. **1,00,000** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.

ஆசிரியர்



# துர்உபதேசங்கள்- ஏன்? எப்படி?


## Rev. J. ஸ்டேன்லி மாணிக்கராஜ்

செயலாளர், தமிழ் பிரதேச ஏ.ஜி. சபைகள்
மூத்த போதகர், ஏ.ஜி. சர்ச், வேலூர் - 6


பரிபூரணஜீவன் வாசகர்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

கள்ளத் தீர்க்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள், அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள். 2 பேதுரு 2:1 பிள்ளைகளே, நீங்கள் ஒருவராலும் வஞ்சிக்கப்படாதிருங்கள் 1 யோவான் 3:2 ஆதித்திருச்சபையில் கள்ள உபதேசங்களும், கள்ளத் தீர்க்கதரிசிகளும் அதிகமாக இருந்தார்கள். ஆரம்பம் முதலே திருச்சபை, வெளியே இருந்து வந்த பிரச்சினைகளையும் (External issues), உள்ளே இருந்து வந்த பிரச்சனைகளையும் (Internal issues) சந்தித்து வந்தன. ஆனால் உள்ளே இருந்து வந்த பிரச்சனைகளுக்கு தான் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

## I. துர் உபதேசங்கள் ஏன் வருகின்றன?

பொதுவாக துர் உபதேசங்கள் அறியாமையால், சரியாக விளங்கிக் கொள்ளாததால், சூழ்நிலையை கருத்தில் கொள்ளாததால், தன்னுடைய கருத்துக்களை வலியுறுத்த விரும்பியதால் ஏற்பட்டது. ஒரு சில முக்கிய காரணங்களை கீழே கொடுக்கிறேன்.

### 1. வேத பகுதியை தவறாக புரிந்துகொள்ளுதல் (Misunderstanding of the Text)

வேதாகமம் ஒரு குறிப்பிட்ட கலாச்சார வரலாற்றுப் பின்னணியில் எழுதப்பட்டது (Written in a Particular Historical an Cultural Context). அதை அறியாமல் விளக்கம் கொடுக்க முற்படும்போது உபதேச கோளாறுகள் வருகிறது. பிலேமோன் 1:10ல்- கட்டப்பட்டிருக்கையில் பெற்ற குமாரனாகிய ஒநேசிமு, என்று பவுல் குறிப்பிட்டதை, பவுலும்- சீலாவும் சிறைச்சாலையிலிருந்தபோது பிறந்தவன்தான் ஒநேசிமு என்று பலர் குறிப்பிடுவது. நம்முடைய கலாச்சாரத்தில் சீலா என்பது ஒரு பெண்ணின் பெயர். ஆனால் அவர் ஒரு ஆண்.

### 2. குறிப்பிட்ட பகுதியை மட்டும் தெரிந்தெடுத்தல் (Selectivity)

ஒரு போதனை கொடுக்கும்போது, அல்லது ஒரு காரியத்தை வேதத்திலிருந்து விளங்க முயற்சிக்கும்போது முழு வேதாகமத்தின் போதனைகளை கருத்தில் கொள்ளாமல், ஒரு குறிப்பிட்ட பகுதியை மட்டும் எடுக்கும்போது, பிரச்சனை வருகிறது. 1 கொரிந்தியர் 7:1-ல் ஸ்திரீயை தொடாமலிருக்கிறது நல்லது என்ற வாக்கியத்தை வைத்து, திருமணம் செய்வது தவறு, ஊழியர்கள் கண்டிப்பாக திருமணம் செய்யக் கூடாது போன்ற கருத்துக்களை, திருமணத்தை ஏற்படுத்தின ஆண்டவரையே குறைகூறுவதற்கும் காரணம், ஒரு வசனத்தை வைத்து ஒரு உபதேசத்தை உருவாக்க நினைத்ததால் வந்தது.

### 3.தனிப்பட்ட கருத்துக்களை வேத போதனையாக/உபதேசமாக கூறுதல் (Insisting Personal Opinions as Bible Doctrines)

ஊழியர்கள், தங்களது அனுபவங்களை மட்டும் பேசக்கூடாது. வசனங்களைத் தான் பேச வேண்டும். ஒரு சிலர் தங்களது அனுபவங்களை அதிகமாக வலியுறுத்த

நினைக்கும்போது, அது துர்உபதேசமாக மாறுகிறது. ஒருவரும் உங்களுக்கு போதிக்க வேண்டிய அவசியமில்லை (1 யோவான் 2:27) என்ற வசனத்தை வைத்து, சபைக்குப் போக வேண்டிய அவசியமில்லை, ஆவியானவர் நேரடியாக உங்களோடு பேசுவார் என போதிக்கிறவர்கள் உண்டு. கள்ள உபதேசங்களுக்கு எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்ற சூழ்நிலையில் (Context) இவ்வசனம் கொடுக்கப்பட்டது.

### 4. தவறாக பொருத்துதல் (False Combination)

எழுதப்பட்ட சூழ்நிலைக்கு மாறாக ஒரு வசனத்தை எடுத்து, அதை இன்னொரு இடத்தில் சொல்லப்பட்ட வசனத்தோடு பொருத்தி பேசுவது தவறு. 'ஸ்திரீகளை தொடாமலிருப்பது நல்லது' என்ற வார்த்தையை, 'ஸ்திரீகளினால் கறைபடாதவர்கள்' என்ற வெளிப்படுத்துதலில் சொல்லப்பட்ட வசனத்தோடு ஒப்பிட்டு, திருமணமாகாதவர்கள் தான் சீயோனுக்கு செல்ல முடியும் என்ற உபதேசத்தை உருவாக்கிவிட்டார்கள். இது தவறான பொருத்துதல் ஆகும். வெளிப்படுத்துதலில் சொல்லப்பட்ட ஸ்திரீ-உலகத்தால் கறைபடாத என்ற அர்த்தத்தில் கொடுக்கப் பட்டுள்ளது.

### 5.வேதத்திற்கு புறம்பான கருத்துக்களை கூறும் தலைவர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தல் (Extra Canonical Authority)

அநேக துர்உபதேசங்களை போதிக்கிற ஸ்தாபனங்கள், ஒரு மனிதனின் வார்த்தைகளுக்கு, சொப்பனங்களுக்கு, தீர்க்கதரிசனங்களுக்கு, அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதால் ஏற்படுத்தப்பட்டது என்பது சரித்திர உண்மை. தலைவர்கள் ஆண்டவர் நமக்கு கொடுத்த வரங்கள். ஆனால் அவர்களுடைய சொப்பனங்கள், கருத்துக்களைவிட, வேதம் தான் உயர்ந்தது. வேதத்திற்கு புறம்பான/முரணான எந்த கருத்தும், சொப்பனங்களும், தீர்க்கதரிசனங்களும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடாது. அநேகம் உண்டு, முக்கியமானவைகளை கூறியிருக்கிறேன்.

## II.எப்படி அவர்களை கண்டுபிடிப்பது?

2 பேதுரு 2:1-3 வரை சில காரியங்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

### 1.வேதப்புரட்டுகளை தந்திரமாக நுழைய பண்ணுவார்கள் (Secretly Bring in destructive Heresies/Opinions)

வேதம் எளிமையாக, அனைவரும் விளங்கும் நடையில் எழுதப்பட்டுள்ளது. உபதேசங்கள், சத்தியங்கள் என்ற பெயரில் ஒரு சிலர் வேத உண்மைகளை புரட்டி, தந்திரமாக, கவர்ச்சியாக, ஜனங்கள் விரும்புகிற வகையில் நுழையப் பண்ணுவார்கள். அவர்களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

### 2.ஆண்டவரை மறுதலிப்பார்கள் (Denying Christ)

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இல்லாமல், அவருடைய சிலுவை பாடுகள் இல்லாமல், கிறிஸ்தவ மார்க்கம் இல்லை. தங்களுடைய ஊழியங்களில் தங்களை முன்னிறுத்துகிறவர்கள், செய்திகளில் ஆண்டவரையோ, அவருடைய வார்த்தைகளையோ பேசாதவர்கள், பாடுகளை மறுதலிக்கிறவர்கள், 'இயேசு' என்ற சத்தியத்தை குறிப்பிடாதவர்கள் - இவர்கள் எல்லாருமே கள்ளத்தீர்க்கதரிசிகள் தான்.

### 3. கெட்ட நடத்தையுள்ளவர்கள் (Immoral)

உபதேச கோளாறுகள் உள்ளவர்களிடம், ஒழுக்கம் சம்பந்தப்பட்ட காரியங்களிலும் கண்டிப்பாக பிரச்சனைகள் வரும். காரணம் அவர்கள் வேத சத்தியங்கள் மாற்றப்படுவதில், ஒத்துப்போயிருக்கிறார்கள். வார்த்தைகளில்,

செயல்களில், நடவடிக்கைகளில் கண்ணியம் இல்லாதவர்களிடம் கவனமாக இருக்க வேண்டும்.

### 4. பொருளாசை உடையவர்கள் (Money Minded)

பலவிதமான கவர்ச்சிகரமான திட்டங்கள் மூலம் பல தீர்க்கதரிசிகள் திருச்சபைகளை சார்ந்த ஜனங்களிடத்தில் பணங்களை பெறுகிற திட்டத்திடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நல்ல போதகர்கள், சுவிசேஷகர்கள், தீர்க்கதரிசிகள் பணங்களை சார்ந்து ஊழியம் செய்யமாட்டார்கள். தேவையான பொருளாதாரத்தை ஆண்டவர் தருவார் என்ற நிச்சயத்தோடு செயல்படுவார்கள். உங்களை மயக்கினவன் யார்? (கலா 3:1)

### 5. தங்களுக்கு ஆதாயமாக வசப்படுத்துவார்கள் (Make you their Followers)

எல்லா ஊழியர்களும், வரங்களும், 'சபை பக்திவிருத்தியடைய' 'பரிசுத்தவான்கள் சீர்பொருந்த' (எபே 4:12) தான் கொடுக்கப்பட்டன. தங்களுக்கென்று கூட்டம் சேர்க்கிற யாவரும் தவறானவர்கள் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். சத்தியத்திற்கு கீழ்ப்படியாமற்போக உங்களை தடைசெய்தவன் யார்? (கலாத்தியர் 3:7)

## III. நாம் என்ன செய்ய வேண்டும்?

- ஒருபோதும் மனிதர்களுக்காக வேத சத்தியங்கள் மாற்றப்படுவதற்கு ஒத்துப்போகாதிருங்கள். (Never Compromise with the Biblical Doctrines for any Human) கலாத்தியர் 5:11
- வசனத்தில் தேறினவர்களாக மாறுங்கள். (Equip yourselves with the word of God) 1தீமோ 4:15 வேதத்தை திரும்ப திரும்ப வாசியுங்கள், தியானம் பண்ணுங்கள், ஆராய்ந்து பாருங்கள்.
- இப்படிப்பட்ட போதனைகளை கண்டிப்பாக கடிந்து கொள்ளுங்கள் (Rebuke their Teachings) - தீத்து 1:14 அவர்களுக்கு செவிகொடுக்க வேண்டாம், விலகியிருங்கள், தைரியமாக கடிந்து கொள்ளுங்கள்.
- அவர்கள் கொடுக்கிற எந்த இலக்கியங்களையும் (Literatures) வாங்கி வாசிக்க வேண்டாம்.
- ஆரோக்கியமான உபதேசங்களையே கேளுங்கள், பேசுங்கள், பகிர்ந்து கொள்ளுங்கள் (தீத்து 2:1)
- ஆண்டவரிடத்தில் விசேஷித்த பகுத்தறியும் வரத்தை கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது எளிதாக இவைகளை கண்டு கொள்ள முடியும்.
- உங்கள் மனசாட்சியில் சின்ன உறுத்தல்கள் வரும்போது அனுபவமுள்ள ஊழியர்களிடத்தில், போதகர்களிடத்தில் கேட்டு தெளிவைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- எந்த ஊழியர்கள் சொன்னதையும், கண்ணை மூடிக்கொண்டு அப்படியே நம்பாமல், வேதத்திற்கு ஒத்துப்போகிறதா என ஆராய்ந்து பாருங்கள்.

ஆண்டவர் தாமே துர்உபதேசங்களிலிருந்து நம்மையும்,
நம்முடைய திருச்சபைகளையும், அடுத்த சந்ததியையும் காப்பாராக.



# நீதிமொழிகள்

Rev. Dr. சாமுவேல் ராஜ் R.
All India National Director, Global University

தேவன்மேல் நம்பிக்கை வைத்து, பக்தியுள்ள வாழ்க்கை வாழுவதற்குத் தேவையான இரத்தினச் சுருக்கமான வசனங்களைக் கொண்டது **நீதிமொழிகள் புத்தகம்**. **'ஞானம்'** என்பதே இப்புத்தகத்தின் பிரதானக் கருப்பொருள் ஆகும். கர்த்தருக்கு பயப்படுவதின்மூலம் இந்த ஞானம் கிடைக்கிறது என்பதே இப்புத்தகம் நமக்குத்தரும் ஆணிவேர் சத்தியம் (9:10). மக்கள் ஞானத்தைப் பெறவும், ஆண்டவருடன் அதிகம் நெருங்கி வாழவும் இப்புத்தகம் உதவுகிறது. இது தேவன் நியமித்த வழியில் நடக்க விரும்பும் அனைவரும் அனுதினமும் வாசித்து பயனடையச்சிறந்தப் புத்தகம்.

தமிழ், ஆங்கில மொழிகளில் இன்று நமது வழக்கிலுள்ள பழமொழிகள் ஏராளம் உண்டு. அப்படியே, அக்கால கிழக்கத்திய (அரேபியா, பாரசீகம், எகிப்து) நாடுகளில் மக்கள் மத்தியில் அறியப்பட்ட நீதிமொழிகளும் உண்டு. ஆனால் நமது வேதாகமத்திலுள்ள நீதிமொழிகளோ, உடன்படிக்கையின் மக்களிடம் தேவன் எதிர்பார்த்த நீதியின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டவை ஆகும்.

## இப்புத்தகத்தின் நோக்கம் :

இப்புத்தக வசனங்கள் **பேதைகளுக்குப்** புத்திகூர்மையைத் தரும்; **வாலிபருக்குத்** தேவையான அறிவையும், விவேகத்தையும் தரும்; **புத்திமான்கள்** இப்புத்தகத்தைப் படிப்பதின்மூலம் அறிவில் தேர்ச்சியடைவர் (1:2-7),

## இப்புத்தகத்தின் வடிவமைப்பு :

எளிதில் மனப்பாடம் செய்யவும், நமது பிள்ளைகளுக்கும், பின்வரும் சந்ததிகளுக்கும் போதிக்கவும் இப்புத்தகம் தெய்வீகத் திருவாக்குகளாகவும், உவமைகளாகவும், ஞானபோதனைகளடங்கிய சொற்றொடர்களாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மாதத்தின் ஒவ்வொரு நாளும் வரிசைக் கிரமமாக அந்தந்த தேதியின்படியே ஒவ்வொரு அதிகாரமாக வாசித்தால், ஒரு மாதத்தில் முழுப்புத்தகத்தையும் வாசித்து முடிக்க இயலும்.

## இப்புத்தகத்தை எழுதியவர்கள் :

தாவீதின் மகன் சாலமோன் 300 நீதிமொழிகளையும் 1005 பாடல்களையும் எழுதியுள்ளான் (1இராஜா.4:32). அவன்தான் இப்புத்தகத்தின் பெரும்பகுதியை எழுதியவன் (1:1).

யூதாவின் இராஜாவாகிய **எசேக்கியாவின்** அரசவை ஞானிகள் (25:1) குறிப்பிட்ட சில பகுதிகளையும், **ஆகூர்** (30:1) மற்றும் **லேமுவேல்** (31:1) என்போர் சில பகுதிகளையும் எழுதி தந்துள்ளார்கள்.

## இப்புத்தகம் தரும் செய்தி :

இன்றிலிருந்து சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பாக எழுதப்பட்ட இப்புத்தகம்

தரும் செய்திகள் தற்காலத்தின் அதிநவீன உலகிற்கும் மிகவும் பொருத்தமான தாகவும் பயனளிப்பதாகவும் உள்ளன.

பல்வேறு விஷயங்களை தலைப்புகளாகவும், ஒருபோகுநிலை மற்றும் எதிரிடைக் கருத்துக்களாகவும், சின்னச்சின்ன ஆலோசனைகளாகவும், பலத்த எச்சரிப்புக்களாகவும், புத்திமதிகளாகவும் இதன் 31 அதிகாரங்களிலும் தரப்பட்டுள்ளன. ஏராளம் வசனங்கள் அதற்கு முந்தின, பிந்தின வசனங்களுடன் இணைந்த கருத்துக்களைத் தராமல், தனித்துநின்றே ஆலோசனைத் தருகின்றன. எனவே தலைப்பு வாரியாக இப்புத்தகத்தைப் படிப்பதே பயனளிக்கும் சிறந்த முறையாகும்.

**நீதிமொழிகளிலிருந்து சில நடைமுறைத் தலைப்புகள் :**

ஞானம், கர்த்தருக்குப் பயப்படுதல், சகோதர சிநேகம், புருஷன் மனைவி, பெற்றோர் பிள்ளைகள், பரஸ்திரீயும் குணசாலியான ஸ்திரீயும், சோம்பேறியும் சுறுசுறுப்பானவனும், பேதையும் விவேகியும், அதிபதியும் பிரஜையும், துன்மார்க்கனும் நீதிமானும், ஐசுவரியமும் தரித்திரமும், கோபக்காரனும் நீடிய சாந்தமுள்ளவனும், மூடனும் புத்திமானும், மரணமும் ஜீவனும், உண்மையும் பொய்யும், நன்மையும் தீமையும், கனமும் கனவீனமும், சோம்பலும் சுறுசுறுப்பும், நண்பனும் பகைஞனும், சமாதானமும் கலகமும், தேவனும் மனிதனும் - போன்ற பல்வேறு பயனுள்ளத் தலைப்புகளில் நீதிமொழிகள்தரும் ஆழமான சத்தியங்களைத் தெளிவுறக் கற்றுக் கொள்ளலாம்.

**மனதில் பதிந்த அருமையான தலைப்பு :**

ஏராளம் பயனுள்ளத் தலைப்புகளை ஆராய இங்கு இடம் போதாது. மாதிரிக்கு ஒரே ஒரு தலைப்பை மட்டும் ஆராய்வோம்.

**குணசாலியானப் பெண் (நீதி.31:1-31)**

நற்குணமுள்ள மனைவி, தாய் அல்லது நற்குணமுள்ள புருஷன் என பல்வேறு நிலைகளில் இப்பகுதியை நடைமுறைப்படுத்தலாம். இங்குச் சித்தரிக்கப்பட்டுள்ளப் பெண் தனது சிருஷ்டிகரால் தனக்குக் கொடுக்கப்பட்ட செயல்திட்டங்களை ஏற்று, அதன்படி நடக்கிறவளாகக் காணப்படுகிறாள். பெண்களுக்கான தேவத்திட்டம் இவளில் நிறைவேறுவதைக் காண்கிறோம். அவளுடைய வாழ்க்கை முழுவதுமே தேவபயத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது.

31:10-31 வரையுள்ள வசனங்களும் (தமிழ்மொழியில் **"அகர வரிசையில்"** எழுதுவதுபோல) எபிரெய மொழியிலுள்ள 22 எழுத்துக்களையும் ஒன்றன்பின் ஒன்றாக வைத்து வசனங்கள் ஆரம்பிக்கின்றன.

இப்பகுதியில் சித்தரிக்கப்பட்டுள்ள **குணசாலியானப் பெண்** வாழ்ந்து வந்த சமுதாயத்தை கவனித்துப் பாருங்கள்; நாம் வாழும் இன்றைய சமுதாயத்திலிருந்து அது வேறுபட்டதல்ல! 31:1-9 வரையுள்ள வசனங்கள் அவள் வாழ்ந்த சமுதாயத்தை நமக்குச் சித்தரிக்கின்றன. பெண்கள் விஷயத்தில் தவறாய் நடக்கிறவர்கள் (31:3). மேலான அதிகாரத்திலுள்ள நல்லவர்களை சூழ்ச்சிசெய்து கவிழ்க்கிறவர்கள் (31:3), குடிபோதையில் தினம்தினம் தங்கள் உயரிய ஸ்தானத்தைக் காத்துக்கொள்ளாத பெரிய மனிதர்கள் (31:4-5). பிறரால் ஒடுக்கப்படுவதினால் நியாயங்கிடைக்காமல் சிறுமைப்படுத்தப்பட்டவர்கள் (31:5). நிற்க நிலையில்லாமல் அழிந்து போகிற மக்கள் (31:6), வறுமையினால் மனங்கசந்திருக்கிறவர்கள் (31:6), தங்களுக்கு எதிராய்

ஜோடிக்கப்பட்ட வழக்குகளில் தங்களுக்காய் பேசத் திறனற்றவர்கள் (ஊமையன்) (31:8), அனாதைகள் போல வாழும் திக்கற்றவர்கள் (31:8), தாழ்த்தப்பட்டவர்கள் என சமுதாயத்தில் ஓரங்கட்டப்பட்டு வறிய நிலையிலுள்ளவர்கள் (31:9) ஆகிய பல்வேறு தரப்பினர் வாழும் சமுதாயத்தில்தான் குணசாலியான இந்தப் பெண்ணும் வாழ்கிறாள்.

இந்த சமுதாய சூழலில் வாழும் குணசாலியானப் பெண் எப்படி வாழ்கிறாள் என்பதை பத்து முத்தானக் குறிப்புகளில் கீழே காண்போம்.

**1. அவள் நல்ல சுவாபமுள்ள (குணசாலி) ஒரு குடும்பப் பெண்** (31:10-12)

தனது புருஷனுக்கு ஏற்ற மனைவியாய் வாழத்தனது நற்சுவாபங்களை வெளிப்படுத்தும் இவள், நல்ல மருமகளாக, அண்ணியாக, நாத்தனாராக, எஜமாட்டியாக, நல்லத் தாயாக - குடும்பத்தில் அனைவருடைய இருதயத்துக்கும் பிரியமானவளாகக் காணப்படுகிறாள்.

**2. கடின வேலைச் செய்ய தன்னை அர்ப்பணித்தவள்** (31:13-22,24)

உற்சாகத்துடன் வேலை செய்கிறாள், வீட்டாருக்குத் தேவையான ஆகாரத்தை தூரத்திலிருந்து சரியான நேரத்தில் கொண்டு வருகிறாள்; சமைத்தும் கொடுக்கிறாள். தன் வீட்டு வேலைக்காரிகளுக்கும் படியளக்கிறாள்.

இரவு பிந்தித் தூங்கச்சென்று கைப்பாடாய் சேர்க்கிறாள். சிறுகச் சேமித்து, வரத்துள்ள வயல்களையும் தோட்டங்களையும் நிலங்களையும் வாங்குகிறாள்.

**3. தயாள குணமுடையவள்** (31:20)

இந்த குணசாலி, தாராளமாய்க் கொடுக்கிறாள் (31:20). ஏழைகளுக்கும், தேவையுள்ளவர்களுக்கும் இரங்கித் தாராளமாய்க் கொடுக்கும் தாயுள்ளம் கொண்டவள் இவள்.

**4. பெரிய மனிதர் வரிசையில் தனது கணவன் அமர அனுகூலமாயிருக்கிறாள்** (31:23)

தனது புருஷன் அவனது கடமைகளைச் செய்யத் தன்னாலானவை அனைத்தையும் செய்கிறாள்.

**5. தனது எதிர்காலத்தைக் குறித்து நம்பிக்கையுடனிருக்கிறாள்** (31:25)

பிரகாசமான நல்ல நாட்கள் தனக்கிருக்கிறது என்பதை தன் அகக்கண்களில் கண்டு மகிழ்ச்சியடைகிறாள்.

**6. பிள்ளைகளுக்குப் போதிக்கிறாள்** (31:26)

தன்வீட்டில் அனைவருடனும் பேச வேண்டியதை ஞானத்துடன் பேசுகிறாள். தன் பிள்ளைகளுக்கும் நேரமெடுத்துப் போதிக்கிறாள். ஞாயிறுப்பள்ளி பாடங்கள் போல, வீட்டில் வேதத்தைப் போதிக்கும் திறமையுடையவள்.

**7. கவனமான குடும்பப் பராமரிப்பு** (31:27)

தன் வீட்டில் உணவு, உடையென குறையேதுமில்லாமல் குடும்பத்தை கவனமாய் நடத்திச் செல்கிறாள்.

**8. பிறரால் புகழப்பட்டவள்** (31:28-29)

இவள் மெச்சப்படத்தக்கவள், பாராட்டப்படத்தக்கவள். எனவே, வீட்டில் புருஷன். பிள்ளைகள் அனைவராலும் புகழப்படுகிறாள்.

**9. கர்த்தருக்குப் பயப்படுகிற வாழ்க்கை** (31:30)

ஜெபத்திற்கும், தியானத்திற்கும் நேரமெடுக்கிறாள்.

**10.நற்சாட்சியுள்ள வாழ்க்கை** (31:31)

நற்கிரியைகளில் சிறந்து விளங்கும் இவளை, வீடுதேடி வந்து வாழ்த்தும் அண்டை அயலார் அநேகர்.

இத்தகைய வாழ்க்கையை அத்தகைய சமுதாயத்தில் இவளால் எப்படி வாழ முடிந்தது?

அவளுக்கிருந்த கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் (31:30), ஏழைகளுக்கு இரங்கும் மனதுருக்கமுள்ள அவளுடைய நல்ல இருதயம் (31:19-20). தனது குடும்பத்திலுள்ள அனைவரிடமும் அவளுக்கிருந்த உண்மையும் அன்பும் (31:27).

இவைதான் மேற்சொன்ன அனைத்திற்கும் அடிப்படையாகும். குணசாலியான இந்தப் பெண்ணைப் பற்றிய விபரம் போலவே, நீதிமொழிகள் புத்தகத்திலிருந்து ஏராளம் தலைப்புகளை எடுத்துப் படிக்கலாம், தியானிக்கலாம், பலன் பெறலாம்.

நீதிமொழிகள் கற்பிக்கும் ஞானம் அறிவைச் சார்ந்ததல்ல, ஆசாரிப்புக் கூடாரத்தை வடிவமைத்து எழுப்பவும், சாலமோனின் தேவாலயத்தை எழுப்பிக்கட்டவும் தேவஞானம் தேவைப்பட்டது. **பெசலெயேல்** ஆசரிப்புக் கூடாரத்தின் பணிகளைச் செய்து முடிக்க தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட சிற்பாசாரி அவனுக்கு வேண்டிய ஞானமும், புத்தியும், அறிவும் தேவனால் கொடுக்கப்பட்டது (யாத். 31:1-4). இத்தகைய ஞானத்தையே நீதிமொழிகள் போதிக்கிறது.

நீதிமொழிகள் புத்தகம் சொல்லுகின்ற ஞானத்தைப் பெறும் நாம் தேவனுடைய நீதி நியாயங்களைக் கைக்கொண்டு நடப்போமாக. அப்பொழுது இவ்வுலகில் அனைத்துச் செல்வங்களுடனும் ஆசீர்வாதமாய் வாழமுடியும். இவ்வுலக வாழ்வுக்குப் பின் நித்திய ஜீவனை அடைய முடியும் என்ற நம்பிக்கையுடன் மகிழ்ச்சியான வாழ்வினையும் இந்த ஞானம் நமக்குத் தருகிறது.

இப்புத்தகத்தை இன்னும் ஆழமாகத் தியானித்து தேவனுடன் நெருங்கிவாழ நமதாண்டவர்தாமே நமக்குக் கிருபை தருவாராக!


**பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும் உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்**

**" Tamil District Council of SIAG "**

என்ற பெயரில் காசோலை அல்லது DD எடுத்து
பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு சென்னையில் உள்ள
நமது பொருளாளர் அலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

The Treasurer,
Tamil District Council of SIAG, E-17, Anna Nagar, Chennai - 600 102

# A.G. தமிழ்நாடு வேதாகமக் கல்லூரி

(An ATA Accredited College)

மதுரை - 625 016

Email : agtbc1948madurai@gmail.com  Website : www.agtbc.org

## I. Residential Studies

### 1. Master of Divinity (M.Div.)

**Medium** : English | **Duration** : 3 Years

**Eligibility :** Any Degree from Recognized University (10+2+3)

### 2. Bachelor of Theology (B.Th.,)

**Medium** : English and Tamil | **Duration** : 3 Years

**Eligibility** : +2 Pass (10+2)

### 3. Diploma in Theology (Dip. Th.,)

**Medium** : Tamil | **Duration** : 2 Years

**Eligibility** : S.S.L.C. (X Std Pass)

## II. Modular Studies

### 1. Master of Divinity (M.Div)

**Medium** : English | **Duration** : 3 Years (For Men and Women)

Eligibility: Any Degree from Recognized University (10+2+3)

B.Th Degree or its equivalent

### 2. Bachelor of Theology (B.Th)

**Medium** : Tamil | **Duration** : 3 Years

Eligibility: S.S.L.C. and Diploma in Theology (10+Dip.Th) (Only for Ministers)

## III. Extension Studies

### 1. Diploma in Theology (Dip.Th)

**Medium** : Tamil | **Duration** : 2 Years

Eligibility: S.S.L.C. (X Pass)

---

விண்ணப்ப படிவத்திற்கு

**Download Application Form : www.agtbc.org**

---

தொடர்பு:

*Director of Residential Studies*

**AG Tamilnadu Bible College**

Post Box-1, Bye Pass Road, Madurai - 625 016

Cell : 96982 55027, 94430 70974, Ph: 0452 2601940.



# முற்றுப் புள்ளியல்ல... புதிய துவக்கமே


Rev. J. தேவதாசன் கலையரசன்

மூத்த போதகர், பெத்தேல் ஏஜி. சர்ச், குளத்தூர்


சிறியவர் முதல் பெரியவர் வரை பேசும் ஒரு தொற்றுநோய், கொரோனா வைரஸ் நோய்தான். காரணம் இந்நோய் உலகத்திற்கு புதிய வரவு. மருந்தில்லை, சாதாரண சளி, காய்ச்சலில் ஆரம்பித்து நுரையீரல் உட்பட உள்ளுறுப்புகளை பாதிக்கும் உயிர்கொல்லி நோய். முழு உலகையும் நடுங்க வைத்த நோய். இந்த நோய் ஏற்படுத்திய அழிவு, தாக்கம் கொஞ்சம் நஞ்சமல்ல. அது முழு உலகத்தையும் புரட்டிப்போட்டது. உலக வரலாற்றை இனி கொரோனாவிற்கு முன், கொரோனாவிற்கு பின் என்று பிரித்துப் பார்க்கக்கூடிய அளவில், சமூகம், அரசியல், ஆன்மீகம் என்ற அனைத்து துறைகளிலும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி விட்டது.

கிறிஸ்தவ உலகத்திலும் 2000 வருடங்கள் பழகின கூட்டு வழிபாடு தடை செய்யப்பட்டதால், பல கேள்விகள் எழும்புகின்றன. ஜெபித்து, பெய்த மழையையே நிறுத்தினோம். மழை பெய்ய வைத்தோம். இப்போது முன்பைவிட தீவிரமாக ஜெபிக்கிறோம். ஆனால் பலன் மிகமிக குறைவாயிருக்கிறது. இந்த வியாதி என்ன செய்யுமென்று மருத்துவர்கள் கூறுகிறார்களோ, அது அப்படியே நடக்கிறது. எனவே இது சாதாரண நோயல்ல, கொள்ளை நோய். எகிப்திய வாதையா? தேவனுடைய நியாயத்தீர்ப்பு ஆரம்பித்து விட்டதா! என்ற பல கேள்விகள் கிறிஸ்துவ உலகத்தில் எழுப்பப்படுகின்றன. கடைசி காலத்தின் அடையாளம்தான். இன்னும் சிலமணி நேரம் தான் இருக்கிறது என்று இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை மீண்டும் நினைப்பூட்டி விட்டது இந்நோய்.

கிறிஸ்தவ உலகத்திலும், இது உலகத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் நாட்கள் என்றும், அல்ல அல்ல ஒரு புதிய துவக்கம் என்றும் இரு வேறு விவாதங்கள் முன்னெடுக்கப்படுகிறது. நம்மைப் பொறுத்தமட்டில், இயேசுவின் வருகை இக்காலத்தில் இருக்குமாயின் சபை அவரை சந்திக்க ஆயத்தமாக வேண்டும். ஒருவேளை கொள்ளை நோய்களும், யுத்தங்களும், முடிவின் துவக்கமாக இருந்தால் (மத்.24:6-8). இன்னும் கொஞ்ச நாள் வாழவேண்டுமே? அதற்குரிய சத்தியங்களையும் அறிந்து கொள்ள வேண்டும்.

ஏன் நடந்தது, எப்படி நடந்தது? யாரால்? யாருக்காக நடந்தது? என்கிற ஆராய்ச்சியை உலகம் செய்யட்டும். அதைவிட முக்கியமானதும், அவசரமானதும் இதுதான். இப்படிப்பட்ட நெருக்கடியான காலங்களில் ‘சபை என்ன செய்ய வேண்டும்’? ஒரு விசுவாசி, ஒரு ஊழியர் எப்படி வாழ வேண்டும்? என்பதை அறிந்து கொள்வதேயாகும்.

## I. அறிந்து கொள்ளுங்கள், ஜாக்கிரதையாயிருங்கள் :

எகிப்திய வாதையோ நியாயத்தீர்ப்போ என்று விவாதிப்பதை விட இது கொடிய நோய் என்பதை முதலாவது அறிந்து கொள்ளுங்கள். இந்நோயின்

வீரியத்தை முதன்முதலாக சீனாவில் கடந்த வருடம் இறுதியில் ஒரு மருத்துவர் அறிவித்தபோது, அந்நோயின் தன்மை வீரியம் குறித்து அறிவு போதுமான அளவு இல்லாதிருந்தது. அதனால் தான் இந்த அளவு அழிவைச் சந்திக்கிறோம். எனவே நாமும் இந்த நோயைக் குறித்த அறிவை ஓரளவாவது அறிந்திருக்க வேண்டும். அப்போது தான் நம்மையும் நம்மைச் சார்ந்து இருப்பவர்களையும் பாதுகாக்க முடியும்.

நோய் தொற்றை கண்டுபிடித்த பின்பு ஒரு மாதம் கழித்து சீன அதிபர் தங்கள் நாட்டில் இப்படிப்பட்ட ஒரு கொடிய நோய் வந்துவிட்டது என்பதை 2020 ஜனவரி 20-ம் தேதி அறிவித்தார். இதை ஒரு கொடிய மற்றும் மோசமாக பரவும் தொற்று நோயாக (Epidemic) ஜனவரி 30ம் தேதி அன்றே உலக சுகாதார நிறுவனம் (WHO) அறிவித்தது. இந்நோயைக் குறித்த 'அறிவு' இல்லாதபடியால் ஏற்பட்ட அலட்சியம் தான் 30 நாட்கள் தாமதமாய் இந்த அறிவிப்பு வர காரணமாயிற்று. அதற்குள் வூகான் மாநிலத்தில் மக்கள் செத்து மடியத் துவங்கினார்கள்.

மார்ச் 11-ம் தேதிதான் உலக அளவில் பரவக்கூடிய தொற்று நோயாக (Pandemic), WHO அறிவித்தது. வியாதியைக் குறித்த போதிய 'அறிவு' இல்லாமல் போனதே இத்தனை அழிவுக்கும் காரணமாக குற்றம் சாட்டப்படுகிறது.

எந்த ஒரு நாட்டின் அரசாங்கமும் இந்த நோயை குறித்த அறிவிப்புகள் கொடுக்கும்போது அரசியல் ரீதியான, மதரீதியான கண்ணோட்டத்துடன் அதை அணுகாமல் வியாதியின் கண்ணோட்டத்தில் அணுகுவது விவேகமானது. கடந்த மார்ச் 22ம் தேதி மக்கள் ஊரடங்கு என்று நமது அறிவிப்பை வியாதியின் கண்ணோட்டத்துடன் பார்க்க தவறியதால் தான். இவ்வியாதியின் தன்மையை அறிந்து தமது மக்களுக்கு கற்றுக்கொடுக்கும் சமூகப் பொறுப்பையுடையது தான் சபை. இதைக்குறித்த அறியாமை, அஜாக்கிரதை அழிவை இன்னும் அதிகரிக்கச் செய்யும்.

இவ்வியாதியின் தற்காலிக தீர்வாக சமூக விலக்கலே (Social Distance) ஒரே வழி என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவியல் உண்மையோடு கூட்டு வழிபாடு நடத்த இயலாததை கவனியுங்கள். தமது சபை மக்களை பாதுகாக்க விரும்பினால் சில வாரங்கள் விலகியிருப்போம். அநேக சபைகள் இந்த விலகியிருக்கும் காலத்தில் தங்கள் விசுவாசிகளோடுள்ள ஐக்கியத்தை பாதுகாப்பதில் வெற்றியடைந்திருக்கிறார்கள். குறுகிய காலத்திற்குள் பல புதிய யுக்திகளை கண்டுபிடித்துவிட்டார்கள்.

## II. தைரியம் கொள்ளுங்கள், செயல்படுங்கள் :

ஒரு பிரிவினர் அசட்டை செய்கின்றனர். மற்றொரு பிரிவினர் பயந்து கிடக்கிறார்கள். நாமோ தைரியம் கொள்ள வேண்டிய நாட்கள். இந்த வியாதியில் தொற்று ஏற்பட்டவர்களில் மிக குறைந்த சதவீதத்தினர்தான் மரிக்கின்றனர். தொற்று உள்ளவர்கள் பயப்பட தேவையில்லை. தனிமைப்படுத்தப்பட்டு (Quarantine) சத்தான ஆகாரம் எடுத்து இந்நோயிலிருந்து விடுபட முடியும் என மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

சிகிச்சைக்குப் பின் வீடு திரும்பியவர்களின் எண்ணிக்கையும் 6 லட்சத்தைத் தாண்டியுள்ளது.

வேதம் கூறுவது என்ன! பயப்படாதே (ஏசாயா 43:1-5). பவுலைப் போல இக்கட்டு காலத்தில் தைரியம் கொண்டு, பிறருக்கு ஊழியம் செய்யும் நிலைமையை சபை பெற வேண்டும் (அப்.27:22).

இந்த நோய் யாரைத் தாக்குகிறது? எதிர்ப்பு சக்தி குறைந்தவர்களையே. எவ்வளவு சத்துள்ள ஆகாரத்தை சாப்பிட்டாலும், பயத்திற்கு இடம் கொடுத்துவிட்டால் எதிர்ப்பு சக்தி தானாக குறைந்துவிடும். இந்நோயைவிட, இந்நோயைக் குறித்த பயம்தான் மக்களைக் கொல்லுகிறது.

என்ன எதிர்மறையான சூழ்நிலையிலும், பயத்திலிருந்து விடுபடவும், தைரியம் கொள்ளவும் உள்ள ஒரே அமைப்பு சபைதான். இன்றைய உலகத்தின் தேவைக்கு இயேசுவே பதில் என்பதை சபை உரத்த குரலில் கூறவேண்டும்.

பூட்டப்பட்ட அறைகளுக்குள் கண்ணீரோடு இருந்த சீஷர்களுக்கு ஒப்பாகவே இன்றைய சபை இருக்கிறது (மாற்கு 16:10). இன்றைய சபை தைரியம் கொள்ளவும். செயல்படவும் உயிர்த்தெழுந்த இயேசுவை மீண்டும் காணவேண்டும் (லூக்கா 24:45-48).

## III. நம்பிக்கையோடு இருங்கள், ஆயத்தமாகுங்கள் :

மருத்துவர்கள், செவிலியர்கள், துப்புரவுப்பணியாளர்கள், தன்னார்வத் தொண்டர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், அரசியல்வாதிகள், வியாபாரிகள் பயமின்றி வீதியில் நிற்கிறார்கள். யாருமே தங்கள் வாழ்க்கை இத்துடன் முடிந்துவிடும் என்ற பயத்துடன் பணிபுரியவில்லை. அவர்களுக்கு கூட எதிர்காலத்தைக் குறித்த நம்பிக்கை இருக்கிறது.

வாழ்ந்தாலும் இயேசுவோடு மரித்தாலும் இயேசுவோடு என்ற ஒரே நம்பிக்கையுடையவர்கள் நாம், இப்படியிருக்க ஆலயக் கதவுகள் மூடப்பட்டிருப்ப தாலும் நடைபெறும் ஏராளமான மாற்றங்களினாலும் அவ்வளவுதான் என்று முற்றுப்புள்ளி வைக்கலாகுமா? உலகம் ஒரு புதிய மாற்றத்தோடு கொரோனாவுக்கு பிந்தைய உலகத்தை சந்திக்க ஆயத்தமாகிவிட்டது. வாக்குத்தத்தங்களை பெற்ற சபை, நித்திய நம்பிக்கையுடைய சபை ஆயத்தமாக வேண்டுவது அவசியமல்லவா? சபை எழும்பி பிரகாசிக்கட்டும்.

இக்காத்திருப்பு நாட்கள் ஓய்வு நாட்கள் அல்ல. ஆயத்தப்படும் நாட்கள். தேவனோடு நடப்பதிலும், அவரது வருகைக்கும், கொரோனாவுக்கு பிந்தைய உலகத்தை சந்திப்பதற்கும், ஆயத்தப்படும் நாட்கள்.

மூடப்பட்ட கதவுகளுக்குள் நடந்த வேத ஆராய்ச்சி, பெரோயா பட்டணத்தை சுவிசேஷ மயமாக்கிய வரலாற்றை மறந்துவிடக்கூடாது (அப்.17:11-12). ஆகவே சபைக்கும் ஒரு பெரிய எதிர்காலம் உண்டு என நம்புங்கள். காத்திருப்பின் நாட்கள் தேவனை அதிகம் அறியும் நாட்கள் (சங்.46:10). புதுபெலன் பெறும் நாட்கள் (ஏசாயா 40:31) ஆகட்டும்.

ஓட்டம் முடிந்ததென்று முற்றுப்புள்ளி வைக்கும் நாட்கள் அல்ல. ஒரு புதிய மாறுதலுடன்கூடிய சமூகத்தை சந்திக்கும் புதிய துவக்கமாக இருக்கட்டும். எனவே கொரோனா வைத்தது முற்றுப்புள்ளியல்ல புதிய துவக்கம் தான்.

# இந்த ஊரடங்கு நாட்களில் சபையாராகிய நாம் செய்ய வேண்டியது என்ன?



**1. தேவனோடு நேரத்தை செலவிடுங்கள் :**

ஜெபத்திலும், வேதத்தை ஆராய்வதிலும் நேரத்தை செலவிடுங்கள்.

**2. குடும்பத்தோடு நேரம் செலவிடுங்கள் :**

மொபைல் / டிவி / இணையத்தை குறைத்து இதயங்களோடு பேசுங்கள். குடும்பத்தோடு கர்த்தரை ஆராதியுங்கள். குடும்ப கட்டமைப்பு பலப்படும்.

**3.உங்கள் அருகில் இருப்பவரை விசாரியுங்கள்:**

கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்துங்கள். தேவைப்படும் காரியங்களில் சிறிய சிறிய உதவிகளை செய்யுங்கள். இதனால் அவர்கள் இரட்சிக்கப்பட ஏதுவாயிருக்கும்.

**4. சபையாரை விசாரியுங்கள் :**

சபையில் உங்களுக்கு தெரிந்த குடும்பங்களை இக்காலகட்டத்தில் விசாரியுங்கள். அருகில் உள்ள விசுவாச குடும்பங்களுக்கு உதவி செய்யுங்கள்.

**5. கீழ்படியுங்கள் :**

அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட சட்டதிட்டங்களுக்கு கீழ்படியுங்கள். மருத்துவ ஆலோசனைக்கு கீழ்படியுங்கள். தனிமைப்படுத்திக்கொள்ளுங்கள். ஆனால் உதவிட தாமதபடுத்திக் கொள்ளாதிருங்கள்.

**6.பட்டை தீட்டுங்கள் :**

முடங்கிப்போய் விடாதீர்கள். எப்பொழுதும் போல் உற்சாகமாக இருங்கள். நேர்மறையான எண்ணங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள். உங்கள் துறை சார்ந்த விஷயங்களில் உங்களை புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

**7. சின்ன சின்ன ஆசைகளை நிறைவேற்றி மகிழுங்கள் :**

சிறு வயதில் ஆசைப்பட்ட, செய்யமுடியாத அல்லது தொடர முடியாத படம் வரைதல், சமையல், கவிதை, கதை எழுதுதல் etc...

**8. வீட்டை சுத்தப்படுத்துங்கள் :**

வீட்டில் அலமாரிகளை ஒழுங்கு செய்யுங்கள். தேவையானவை, தேவையற்றவை பிரித்தெடுங்கள். அதிகமானவைகளை பிறருக்கு கொடுக்க எடுத்து வையுங்கள்.

**9. ஆரோக்கியத்தில் கவனமாயிருங்கள் :**

இந்த நெருக்கடியான நிலையில் சத்தான சரியானவற்றை எடுத்துக்கொள்ளுங்கள். குடும்ப ஆரோக்கியமே தேசத்தின் ஆரோக்கியம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.



# புருஷர்கள் செய்யவேண்டிய நான்கு கடமைகள்

**Rev. N. ஜான்சன்**

பொருளாளர், தமிழ் பிரதேச ஆண்கள் ஐக்கியம்

தெபொராள் இஸ்ரவேலை நியாயம் விசாரித்த நாட்களில், ஒருநாள் அவள் பாராக் என்ற மனிதனிடம், "நீ பெரும்படையோடு தாபோர் மலைக்கு போ. கானானிய படைத்தளபதி சிசெராவை கர்த்தர் உன் கையில் ஒப்புக்கொடுப்பார்,"' என்றாள். ஆனால் பாராக்கோ பயத்தினால், "நீ என்னோடு வந்தால்தான் போவேன்" என்று கூறியதால் அந்தப் போரினால் வந்த மேன்மை அவனுக்குக் கிடைக்காமல் போனது (நியா. 4:1-24).

பலவேளைகளில் புருஷர்கள் பயத்தினாலும், தயக்கத்தினாலும் கர்த்தர் தங்களுக்கு கொடுக்கும் வாய்ப்புகளையும், கடமைகளையும் நிறைவேற்றாமல் போய்விடுகிறார்கள். ஆகவேதான் அப்போஸ்தலனாகிய பவுல், "விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள், புருஷராயிருங்கள், திடன்கொள்ளுங்கள்" (1கொரி. 16 :13) என்று கட்டளையிடுகிறார்.

ஒவ்வொரு புருஷருக்கும் கர்த்தர் நான்கு விதமான கடமைகளை வைத்திருக்கிறார். பின்வரும் இந்தக் கடமைகளை நாம் நிறைவேற்றும்போது, நிச்சயமாக கர்த்தருடைய ஆசீர்வாதத்தையும், மேன்மையையும் நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

### 1. தேவனுக்கு ஆற்றவேண்டிய கடமை

ஒரு புருஷனின் முதல் கடமை தேவனுக்கு பிரியமாய் வாழ்வதே. தேவனுடைய பரிபூரணமான சித்தம் இன்னதென்று பகுத்தறிந்து (ரோமர் 12:2) அதை நிறைவேற்றுவதும், குமாரனாகிய இயேசுவின் சாயலில் ஒவ்வொரு நாளும் மாறுவதுமே (ரோமர் 8:29) புருஷர்களின் பிரதான நோக்கமாக இருக்க வேண்டும்.

நம்முடைய மாம்ச பெலத்தினால் இதை நிறைவேற்ற முடியாது. ஆவியானவருடைய ஒத்தாசையோடு ஆவியில் நடக்கும் புருஷனால் மட்டுமே (ரோமர் 8:5) தேவசித்தத்தை நிறைவேற்ற முடியும். எனவேதான், மோசேக்குப்பின் இலட்சக்கணக்கான இஸ்ரவேல் மக்களை வழிநடத்த கர்த்தர் யோசுவாவை தெரிந்தெடுத்தார்.

கர்த்தர் மோசேயை நோக்கி: ஆவியைப் பெற்றிருக்கிற புருஷனாகிய யோசுவா என்னும் நூனின் குமாரனை நீ தெரிந்துகொண்டு, அவன்மேல் உன் கையை வைத்து (எண்ணாகமம் 27:18) என்று வாசிக்கிறோம். மோசேக்கு சாதாரண பணிவிடைக்காரனாயிருந்த யோசுவாவை (யாத். 33:11) கர்த்தர் தம் மாபெரும் பணிக்கு அழைக்கக் காரணம் அவன் ஆவியைப் பெற்றிருக்கிற புருஷனாக இருந்தான்.

**வேதவாசிப்பு:** இதை வாசிக்கும் அன்பான சகோதரனே! ஆவியில் நடத்தப்பட முதலாவது நம் சிந்தை வேதவசனத்தால் நிரப்பப்பட வேண்டும். ஜேம்ஸ் கென்னடி என்ற ஊழியர், "எவ்வளவு அதிகமாய் தேவவார்த்தையினால் உங்களை நிரப்புகிறீர்களோ அவ்வளவு அதிகமாய் தேவஆவியினால் நிரப்பப்படுவீர்கள்" என்று கூறுகிறார்.

எனவேதான் தாவீது, "கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்" (சங்.1:2) என்று கூறுகிறார். தினமும் வேதத்தை கிரமமாய் வாசித்து, நாள் முழுவதும் வாசித்த வேதபகுதியை தியானிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ளுங்கள்.

**ஜெபவாழ்க்கை:** ஆவியில் நடத்தப்படுகிறவர்கள் ஆவியில் ஜெபிக்க (எபே. 6:18) தேவன் கிருபை தருவார். அன்றியும், புருஷர்கள் கோபமும் தர்க்கமுமில்லாமல் பரிசுத்தமான கைகளை உயர்த்தி, எல்லா இடங்களிலேயும் ஜெபம் பண்ணவேண்டு மென்று விரும்புகிறேன் (1 தீமோத்தேயு 2:8). பொதுவாக ஜெபம் என்றால் அது பெண்களுடைய வேலை என்று நினைக்கிறோம். ஆனால் அப்போஸ்தலனாகிய பவுல் புருஷர்கள் எல்லா இடங்களிலேயும் ஜெபம் பண்ணவேண்டும் என்று கட்டளையிடுகிறார்.

தினமும் வேதவாசிப்போடு நிறுத்திவிடாமல் தவறாமல் ஜெபிக்கிற பழக்கத்தையும் ஏற்படுத்திக்கொள்ளுங்கள். முதலாவதாக உங்கள் குடும்பத்திற்காகவும் (மத். 6:11), அடுத்து உங்கள் ஊழியருக்காகவும் (1தெச. 5:25), பின்பு தேசத்திற்காகவும் (எசே. 22:30) ஊக்கமாய் ஜெபியுங்கள். ஜெபமும் வேதவாசிப்பும் நம் சிந்தையை தேவனுக்கு நேராகத் திருப்பி, தேவசித்தத்தை அறியவும், செய்யவும், குமாரனாகிய இயேசுவின் சாயலில் மாறவும் செய்ய நிச்சயம் ஆவியானவர் நம்மை பக்குவப்படுத்துவார்.

## 2. குடும்பத்திற்கு ஆற்றவேண்டிய கடமை

முதலாவது தேவராஜ்ஜியத்தைத் தேடும் (மத். 6:33) ஒரு புருஷன் அடுத்து தன் குடும்பத்தை நன்றாக நடத்துபவராக இருக்க வேண்டும். "ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும், ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறா னென்றும், கிறிஸ்துவுக்கு தேவன் தலையாயிருக்கிறாரென்றும், நீங்கள் அறியவேண்டுமென்று விரும்புகிறேன்'' (1கொரி.11:3). தன் மனைவிக்கும், குடும்பத்திற்கும் தலையாக இருக்கும் ஒரு புருஷன் தன் கடமைகளை ஒருபோதும் தட்டிக்கழிக்கக் கூடாது.

மனைவிக்கு ஆற்ற வேண்டிய கடமை: புருஷன் தன் மனைவிக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்யக்கடவன்; அப்படியே மனைவியும் தன் புருஷனுக்குச் செய்யக்கடவள் (1கொரி 7:3) என்று வேதம் வலியுறுத்துகிறது. எனவே, ஒரு புருஷன் தன் மனைவியை நேசித்து, குடும்பத்திற்காக நன்றாக உழைத்து உணவு, உடை, இருப்பிடத்தை குறைவில்லாமல் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். மேலும் தன் மனைவிக்கு ஆற்ற வேண்டிய விவாகக் கடமையையும் நிறைவேற்ற வேண்டும்.

பிள்ளைகளுக்கு ஆற்ற வேண்டிய கடமை: பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக (எபே.6:4) என்று பவுல் அறிவுறுத்துகிறதுபோல, ஒரு புருஷன் தன் பிள்ளைகள் தவறுசெய்யும்போது அவர்களை சிட்சித்து திருத்தவேண்டும். மேலும் அவர்களுக்கு முன்மாதிரியாக வாழ்ந்து, அவர்களோடு நேரம் செலவிட்டு, கர்த்தருக்கேற்ற போதனைகளை அவர்களுக்குத் தவறாமல் கொடுக்க வேண்டும்.

## 3. சபைக்கு ஆற்றவேண்டிய கடமை

மூன்றாவதாக, புருஷர் தங்கள் சபைக்கு தவறாமல் தம் கடமையை நிறைவேற்ற வேண்டும். ...புருஷராகிய நீங்கள் போய், கர்த்தருக்கு ஆராதனை செய்யுங்கள். இதுதானே நீங்கள் விரும்பிக்கேட்டது என்று சொன்னான்... (யாத்திராகமம் 10:11). ஞாயிற்றுக்கிழமைகளில் புருஷர்கள் தங்கள் மனைவி பிள்ளைகளை சபைக்கு அனுப்பிவிட்டு வேலைக்கு செல்வதோ, அல்லது வீட்டில் உறங்குவதோ கூடாது.

குடும்பமாய் சபைக்கு செல்ல வேண்டும்: "நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம்" (யோசுவா 24:15) என்று யோசுவா கூறுகிறதுபோல குடும்பத் தலைவனாகிய புருஷன் காலையில் எழுந்து, மனைவி பிள்ளைகளை உற்சாகப்படுத்தி, ஆயத்தம்செய்து குடும்பமாக ஆராதனையில் பங்கெடுக்கிற பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

உதவிக்கார ஊழியத்தை செய்யவேண்டும்: சபையில் தன்னார்வத் தொண்டராக இணைந்து, உங்கள் ஊழியருக்கு ஊழியத்தில் ஒத்தாசை செய்யவேண்டும். தவறாமல் சபையின் ஜெப ஊழியங்களிலும், சுவிசேஷ ஊழியங்களிலும், சிறுகுழு ஊழியங்களிலும் பங்கெடுத்து மோசேயின் கரங்களைத் தாங்கிய ஊர், ஆரோனாக (யாத். 17:12) மாற வேண்டும்.

காணிக்கை தசமபாகங்களினால் ஊழியத்தைத் தாங்கவேண்டும்: காணிக்கையை ஊழியருக்கு அல்லது சபைக்குத் தருகிறோம் என்ற எண்ணங்களை மாற்றிக் கர்த்தருக்கு செலுத்துகிறோம் என்ற சிந்தனையோடு மனப்பூர்வமாய் கொடுக்க வேண்டும். தேவன் செய்த நன்மைகளுக்கு நன்றி செலுத்தும் விதத்திலும், கர்த்தரைக் கனப்படுத்தும் விதத்திலும் "அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்" (2கொரி 9:7).

### 4. சமுதாயத்திற்கு ஆற்றவேண்டிய கடமை

ஒரு புருஷனின் நான்காவது கடமை கர்த்தர் தன்னை வைத்துள்ள சமுதாயத்திற்கு ஆற்றவேண்டிய கடமையாகும். சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும்: சவுல் வீடுகள்தோறும் நுழைந்து, புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துக்கொண்டு போய், காவலில் போடுவித்து, சபையைப் பாழாக்கிக்கொண்டிருந்தான் (அப். 8:3). சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள். (அப். 8:4). எருசலேமிலிருந்து பல தேசங்களுக்கு சிதறிப்போனவர்கள், விசேஷமாக புருஷர்கள் சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள்.

இந்த விசுவாசிகள் செய்த ஊழியத்தினால் உருவான மிகப்பெரிய சபையே அந்தியோகியா சபையாகும் (அப். 11:19-22). அன்பான சகோதரனே! சுவிசேஷம் அறிவிப்பது பாஸ்டருடைய வேலை என்று ஒதுங்கி விடாமல், உங்கள் சபையோடு இணைந்து தீவிரமாக சுவிசேஷத்தை அறிவியுங்கள்.

சமூகசேவை செய்யவேண்டும்: உங்கள் சமுதாயத்திற்கு சுவிசேஷத்தை அறிவிப்பதோடு நிறுத்திவிடாமல், கொள்ளை நோய்கள், பஞ்சங்கள், இயற்கை சீற்றங்கள் வரும்போது, சபை மூலமாக சமுதாயத்திற்கு சேவை செய்யுங்கள். அப்பொழுது, நீதிமான்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, நாங்கள் எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு உமக்குப் போஜனங் கொடுத்தோம்? எப்பொழுது உம்மைத் தாகமுள்ளவராகக்கண்டு உம்முடைய தாகத்தைத் தீர்த்தோம்? (மத். 25:37) அதற்கு ராஜா பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார். (மத். 25:40)

இதை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பான சகோதரனே! கர்த்தருடைய யுத்தத்தை செய்யும் ஒரு வாய்ப்பை பாராக்குக்கு தேவன் தந்தபோது தயக்கத்தினாலும், பயத்தினாலும் தனக்கு வரவேண்டிய நற்பெயரை அவன் இழந்தான்.

தேவனுக்கும், குடும்பத்திற்கும், சபைக்கும், சமுதாயத்திற்கும் செய்ய வேண்டிய கடமைகளை நீங்கள் நிறைவேற்றாமல் அசதியாக இருப்பீர்கள் என்றால் கர்த்தருடைய வருகையில் அவர் உங்களுக்காக வைத்திருக்கும் நற்பலனை இழந்துபோவீர்கள் (வெளி. 22:12). எனவே, கர்த்தர் கொடுத்த வாய்ப்பைப் பயன்படுத்தி நம் கடமைகளை வெற்றியாய் நிறைவேற்றுவோம்! தேவஆசீர்வாதம் பெறுவோம்!!



**REGULAR FULL TIME COURSES**

**முழு நேர பயிற்சி வகுப்புகள்**

முழு நேர ஊழியத்திற்கு அர்ப்பணித்திருக்கும் சகோதரர்களுக்கு

போதனை மொழி: தமிழ்

- இறையியல் பட்டப்படிப்பு
  (Bachelor of Theology) (ATA)
  தகுதி: 12ம் வகுப்பு காலம்: 3 ஆண்டுகள்
- இறையியல் டிப்ளோமா
  (Diploma in Theology) (ATA)
  தகுதி: 10ம் வகுப்பு காலம்: 2 ஆண்டுகள்
- இறையியல் சான்றிதழ்
  (Certificate in Theology)
  தகுதி: 10ம் வகுப்புக்கு கீழ் காலம்: 2ஆண்டுகள்

**முறையான வேதாகம கல்வி கற்க ஓர் அரிய வாய்ப்பு**

**ADMISSION OPEN**

**EVENING PART TIME COURSES**

**பகுதி நேர பயிற்சி வகுப்புகள்**

For Both Men and Women

Classes: Monday, Thursday & Friday | 6:30 – 8:30 Pm

போதனை மொழி: தமிழ் மற்றும் ஆங்கிலம்

- MASTER OF ARTS IN CHRISTIAN MINISTRY (ATA)
  Eligibility: Any Degree | Duration: Two Years
  Medium of Instruction: English
- கிறிஸ்தவ ஊழியம் – முதுகலை (ATA)
  தகுதி: பட்டபடிப்பு காலம்: 2 ஆண்டுகள்
- கிறிஸ்தவ ஊழியம் – டிப்ளோமா
  தகுதி: 10ம் வகுப்பு காலம்: 2 ஆண்டுகள்

For further information and application form, please contact
Rev. M. Sampath (Principal, MABC)
Mobile : +91 - 94442 87322

MADRAS ASSEMBLIES OF GOD BIBLE COLLEGE

No. 191 (New No. 6), Anna Salai,
Little Mount, Chennai – 600 015, TN.
Phone: 044 – 2235 1646 | 2235 3100
Email: mabc_edu@yahoo.com

# தமிழ் பிரதேச மிஷனரி இயக்கம்

## North West

TAMIL DISTRICT MISSIONS
India and beyond...

**மிஷன் கன்வென்ஷன்**

பிப்ரவரி மாதம் 23-ம் தேதி கோவை தெற்கு மண்டலத்தின் சார்பாக மிஷன் கன்வென்ஷன் சிறப்பாக நடைபெற்றது. பஞ்சாப் மாநிலத்தில் மிஷனரியாக ஊழியம் செய்கிற Rev.விஜிகுமார் அவர்கள் சிறப்பு செய்தியாளராக பங்குபெற்று, “அறுவடைக்கு நேராய்” என்ற தலைப்பின் கீழ் தேவனுடைய வார்த்தையை பகிர்ந்துகொண்டார். இக்கூடுகையில் சுமார் 200 பேர்கள் கலந்துகொண்டனர். இதில் மூன்று பேர் மிஷனரியாக செல்ல தங்களை அர்பணித்தனர். மண்டல போதகருடன் இணைந்து மண்டல மிஷன் பொறுப்பாளர் Rev.கிளமண்ட் எபினேசர் அவர்கள் சிறப்பாக ஏற்பாடுகளை செய்திருந்தார்கள்.











## மிஷனரி பணித்தள செய்திகள்

**1. பாஸ்டர் கோபால் வாகேலா,** திவான் சௌக், குஜராத் : கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம். எங்கள் திருச்சபையின் சார்பாக கடந்த நாட்களில் இரண்டு புதிய கிராமங்களில் ஜெபநடை ஊழியத்தை ஆரம்பித்தோம். இதில் ‘சனாசரா’ என்ற கிராமத்தினரை தொடர்ச்சியாக சந்தித்ததில் 7 நபர்கள் அக்கிராமத்திலிருந்து சபைக்கு வந்தனர். இவர்களில் கீதா என்ற சகோதரி கடந்த இரண்டு ஆண்டுகளாக மூலவியாதியினால் மிகவும் கஷ்டப்பட்டு வந்தார்கள். சபைக்கு வந்த முதல் நாளே கர்த்தர் அந்த சகோதரிக்கு வியாதியிலிருந்து முற்றிலுமாய் சுகம் தந்தார். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

**இந்த மிஷனரியை தாங்கும் சபை :** Rev.B.A.பரமானந்தம், திருப்பூர்.

**2. பாஸ்டர். செல்லாராம்,** பானுசாலி, அஹமதாபாத், குஜராத் : கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம். எங்கள் சபையைச் சேர்ந்த 12 வயதுள்ள சிறுவன் திடீரென வியாதிப்பட்டு மரண தருவாயில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டான். மருத்துவ பரிசோதனைக்குப் பின் மருத்துவர்கள், இவன் இனி பிழைக்கமாட்டான் என்று சொல்லி வீட்டிற்கு அனுப்பி வைத்துவிட்டனர். சபையாராக இணைந்து பாரத்தோடு ஜெபித்தோம். கர்த்தர் அற்புதமாய் அந்த சிறுவனுக்கு ஜீவனைத் தந்தார். கர்த்தருடைய நாமத்திற்கே மகிமை உண்டாவதாக, ஆமென்.

**இந்த மிஷனரியை தாங்கும் சபை :** Rev.V.பொன்ராஜ், மேலூர், மதுரை வடக்கு.

## போய் (இந்து) மக்களினத்திற்காக ஜெபியுங்கள்



**மக்கள் இனம்** : போய் (இந்து)

**மொழி** : ஹிந்தி

**மக்கள் தொகை** : 64,79,000

**கிறிஸ்தவர்கள்** : 0.00%

**அதிகம் வாழும் பகுதி** : உத்திரபிரதேசம், சத்தீஸ்கர், பீகார்

**நம்பிக்கை :** இந்து மத சடங்காச்சாரங்களை தீவிரமாக பின்பற்றும் இவர்கள் பல தெய்வ வணக்கமுடையவர்களாக காணப்படுகின்றனர். ஒவ்வொரு வீட்டிலும் மனசமாதானத்திற்கென பலிபீடம் ஒன்றை வைத்திருப்பார்கள். இது தவிர கண்டோபா மற்றும் வேறு தெய்வங்களின் சிலைகளையும் வீட்டில் வைத்து வழிபடுகின்றனர்.

**தத்தெடுத்துள்ள மண்டலம்:** சாத்தூர்.

## ஜெப விண்ணப்பங்கள்

- நமது மிஷனரிகளின் குடும்பங்கள், மிஷன் பணித்தளங்களில் உள்ள விசுவாசக் குடும்பங்கள் சகல கொள்ளை நோய்களிலிருந்தும் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.
- நாம் மிஷனரிகளுக்கென மாதந்தோறும் அனுப்புகிற பணத்தேவைகள் சந்திக்கப்பட, கொடுக்கிற திருச்சபைகளும், ஜனங்களும் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.
- மிஷன் பணித்தள திருச்சபைகளில் ஆத்துமாக்கள் பெருக, மிஷனரிகளை கர்த்தர் வல்லமையாய் பயன்படுத்த ஜெபிப்போம்.
- மிஷனரி பணித்தளங்களில் காணப்படுகிற ஊழியம் செய்வதற்குண்டான தடைகள் நீங்க ஜெபிப்போம்.
- மிஷனரிகளாய் செல்ல அநேகர் தங்களை அர்ப்பணிக்க, நமது தேசத்தில் சபைகள் இல்லாத எல்லா மாவட்டங்களிலும் சபைகள் ஆரம்பிக்கப்பட ஜெபிப்போம்.



# தேவன் சொல்லிய இடம்


## Rev. I. அலெக்ஸாண்டர்

விஷன் 2020 ஜெப ஒருங்கிணைப்பாளர்


"தேவன் அவனுக்குச் சொல்லியிருந்த இடத்துக்கு வந்தார்கள். அங்கே ஆபிரகாம் ஒரு பலிபீடத்தை உண்டாக்கி, கட்டைகளை அடுக்கி, தன் குமாரனாகிய ஈசாக்கைக் கட்டி, அந்தப் பலிபீடத்தில் அடுக்கிய கட்டைகளின்மேல் அவனைக் கிடத்தினான்" (ஆதியாகமம் 22:9).

இந்த வசனத்தின் ஆரம்பித்திலுள்ள வாக்கியத்தை தியானிக்க விரும்புகிறேன். தேவன் அவனுக்குச் சொல்லியிருந்த இடத்துக்கு வந்தார்கள். And they came to the place which God had told him. ஆபிரகாம் விக்கிரக ஆராதனையுள்ள குடும்பத்திலிருந்து ஜீவனுள்ள தேவனை ஏற்றுகொண்டவன். யோசுவா 24:2ல் ஆபிரகாமின் தகப்பனாகிய தேராகு வேறே தேவர்களை சேவித்தார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. நாம் யாவருக்கும் ஆபிரகாமின் சரித்திரம் நன்றாக தெரியும். தேசத்தையும், இனத்தையும் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப்புறப்பட்டு தேவன் காண்பிக்கும் தேசத்திற்கு வந்த ஆபிரகாமை தேவன் ஆசீர்வதித்திருந்தார். ஆனால் ஆதி.15:2-ல் தேவனிடம் நான் பிள்ளையில்லாமல் இருக்கிறேனே என்றபோது வானத்து நட்சத்திரங்களைபோல பெருகப்பண்ணுவேன் என்று சொல்லி இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்பு ஈசாக்கைக் கொடுத்தார். ஒரே கூடாத்திலிருந்த இஸ்மவேலையும் கூடாரத்தைவிட்டு புறம்பே தள்ளும்படிச் சொன்னார். அதையும் செய்து முடித்தான். அந்தக் காரியம் ஆபிரகாமுக்கு மிகவும் துக்கமாயிருந்தது என்றும் பார்க்கிறோம்.

அடுத்த அதிகாரத்தில் தேவன் ஆபிரகாமை உன் புத்திரனும், உன் ஏகசுதனும் உன் நேசகுமாரனாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக்கொண்டு மோரிய தேசத்துக்குப்போய், அங்கே நான் உனக்கு குறிக்கும் மலைகள் ஒன்றின் மேல் அவனைத் தகன பலியாகப் பலியிடு என்றார். அடுத்த வசனத்தில் ஆபிரகாம் அதிகாலையில் எழுந்தான். கழுதையின் மேல் சேணம் கட்டினான். இரண்டு வேலைக்காரர்களையும், ஈசாக்கையும் கூட்டிக்கொண்டு தகனபலிக்கு கட்டைகளையும் பிளந்து எடுத்துக்கொண்டு தேவன் தனக்கு குறித்த இடத்திற்குப் புறப்பட்டுப் போனான். நம் எல்லாருடைய வாழ்க்கையிலும் ஒரு குறிப்பிட்ட இடத்தை தேவன் வைத்திருக்கிறார்.

தன்னோடு ஆரம்பத்தில் புறப்பட்டு வந்த லோத்தைப்பார்த்து இந்த சமபூமி எங்கும் நில்லாதே. நீ அழியும்படிக்கு மலைக்கு ஓடிப்போ என்றார். ஆனால் லோத்துவின் பதில் என்ன தெரியுமா? "மலைக்கு ஓடிப்போக என்னால் முடியாது" என்றான். அதன் முடிவு நாம் எல்லாருக்கும் தெரியும். யோனாவைப் பார்த்து நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போ என்றார். ஆனால் யோனா கர்த்தருடைய சமுகத்தினின்று விலகி தர்ஷீசுக்கு போகிற கப்பலில் ஏறி போனான் என்று வாசிக்கிறோம். அதன் பின்பு யோனாவின் முடிவு என்ன என்று நமக்கு நன்றாக தெரியும்.

ஆனால் ஆபிரகாமினுடைய வாழ்க்கையில் தேவன் அவனுக்கு சொன்ன இடத்திற்கு வந்தான் என்பது அநேக சத்தியங்களை கற்றுத் தருகிறது. தேவன் அவனுக்குச் சொல்லியிருந்த தேசம், தேவன் அவனுக்குச் சொல்லியிருந்த மலை; அந்த மலையில் தேவன் குறித்த இடம் என்பது மிகவும முக்கியம். சிலர் சொல்லியிருந்த

தேசத்திற்கு போகலாம் அல்லது மலைக்குப் போகலாம். ஆனால் தேவன் குறித்த இடத்திற்கு வரவேண்டும். தேவன் குறித்த இடம் நமக்கு ஏராளமான சத்தியங்களை கற்றுத்தருகிறது.

1. ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து புறப்பட்டு தேவன் அவனுக்குச் சொல்லியிருந்த இடத்திற்கு வந்தது, ஆபிரகாமின் வாழ்க்கையில் மிகச்சிறந்த கீழ்படிதலுக்கான செயல்களில் ஒன்று (One of the greatest acts of obedience). ஆபிரகாம் வாழ்க்கையின் ஆரம்பமே."கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னபடியே" அவன் புறப்பட்டுப் போனான் என்று தான் இருக்கிறது. கடந்த காலங்களில் தேவனுக்கு கீழ்படிதலின் முக்கியத்துவத்தை குறித்து அனேக கடினமான காரியங்களையும் கற்றிருக்கிறான். கீழ்ப்படிதல் என்பது எப்போதுமே ஒரு போராட்டமாகத்தான் இருக்கும். ஏனென்றால் சில வேளைகளில் நாம் விரும்பி வைத்திருக்கிற சில காரியங்களை நாம் விட்டுக்கொடுக்க வேண்டியதாயிருக்கும். எனவே கீழ்ப்படிதல் எப்போதும் எளிதானதாகவோ அல்லது இயற்கையாக வருகிற ஒரு செயல் என்றோ எண்ணிவிடக்கூடாது.
2. தேவன் சொல்லியிருந்த இடம் மிகச்சிறந்ததை தேவனுக்குக் கொடுக்குமிடம். தேவன் பிள்ளைகளைப் பலியிடுவதை லேவி.20:1-5 வசனங்களில் கண்டிக்கிறார். ஆனால் இங்கே தேவன் ஆபிரகாமை சோதித்ததற்கு காரணம் ஆபிரகாம் இந்த கடினமான அனுபவத்தில் தேவன் தேவைகளை சந்திக்கிறவர் என்பதை அறிந்து கொள்வதற்காகத்தான் அனுமதித்தார். "யெகோவாயீரே" எந்த வேளையிலும், எந்த சூழ்நிலையிலும் நம் தேவைகளை சந்திக்கிறார் என்கிற சத்தியத்தை ஆபிரகாம் கற்றுக்கொண்டார்.
3. தேவன் சொல்லிய இடத்தில் தேவ சத்தத்தைக் கேட்டான். 11-ம் வசனத்தில் "ஆபிரகாமே, ஆபிரகாமே" என்று தூதன் கூப்பிட்டான் என்று பார்க்கிறோம்.
4. கர்த்தர் சொல்லியிருந்த இடம், பலிபீடம் கட்டும் இடம். தேவன் சொல்லியிருந்த இடத்திற்கு நாம் வந்தால்தான் ரோமர் 12:1-ல் சொல்லப்பட்டிருக்கிற ஜீவபலியாக நம்மை ஒப்புக்கொடுக்க முடியும்.
5. தேவன் சொல்லியிருந்த இடத்தில் தான் தெய்வீக அங்கீகாரம் கிடைத்தது. (He had the approval of God) 12-ம் வசனத்தில் "நீ தேவனுக்கு பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றார்".

நாமும் நம்முடைய வாழ்க்கையில் தேவன் சொல்லியிருந்த இடத்திற்கு வருவோம். நம்மை ஜீவ பலியாக ஒப்புக்கொடுப்போம். அன்று ஆபிரகாமை அங்கீகரித்த தேவன் நம்மையும் அங்கீகரிக்க தேவனுக்குக் கீழ்ப்படிந்து சாட்சி பெறுவோம். அல்லேலூயா ஆமென்.

---


**தாங்கள் பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு செய்திகள், கவிதைகள், துணுக்குகள், கடிதங்கள், சாட்சிகள் யாவற்றையும் அனுப்பித் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்**

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

ஆசிரியர், **பரிபூரண ஜீவன்,**

43/3 ஆபிசர்ஸ் காலனி, புத்தூர், திருச்சி - 17

செல் : 94434 15484

# Antioch Biblical Seminary & College

ASSEMBLIES OF GOD

Affiliated with Tamil District Council of SIAG

Accredited by Asia Theological Association (ATA)

## M.Th. Program : *A Non - Residential Course in* Christian Theology

**Wanted : *Residential Faculty with M.Th./Ph.D. (ATA / Serampore) in any discipline. (North Indians Preferred)***

| Courses | Duration | Qualification |
|---|---|---|
| B.Th. | 3 Years | 12th Pass |
| M.Div. | 2/3 Years | B.Th. (ATA)/any University Degree |
| Dip.Th. | 2 Years | 10th Pass |





## College Reopens on the 1st of June 2020

The Registrar

**ANTIOCH BIBLICAL SEMINARY & COLLEGE**

Post.Box-05, Pondicherry University, Pillaichavady,Mathur Road, Puducherry- 605 014.
Office Phone: (0413) 2970521/22/23 Cell: 09865209821 Email: abscollege@gmail.com.
Website: www.antioch.in



சிறுவர் பகுதி

# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ

பாஸ்டர். பெவிஸ்டன்
பரமன்குறிச்சி, நாசரேத் மண்டலம்

ஹாய் குட்டீஸ்.. எப்படியிருக்கிறீங்க..? கண்ணுக்கு தெரியாத வைரஸ் பரவிக்கொண்டிருப்பதால் யாரும் வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம்னு லாக் டவுன் அறிவிச்சிருக்கிறாங்க.. ரொம்ப பயமா இருக்கா? பயப்படாதீங்க.. உங்களை காக்கும்படி இயேசப்பா உங்க கூடவே இருக்கிறாங்க.. ஒரு தீங்கும் உங்களை நெருங்க முடியாது. அதே நேரம் இயேசப்பா நமக்கு ஞானத்தையும் தந்திருக்கிறாங்க அப்படித்தானே.. ஆகவே அரசாங்க உத்தரவை மதித்து கவனமாக இருக்கனும். கவன குறைவோடு வெளியிலும், வீதியிலும் சுற்றினால் நமக்கு தான் ஆபத்து அப்படிதானே.. ஆமா ஆமானு அழகா தலைய ஆட்டுறீங்களே.. வெரிகுட்.. OK.. கதை கேட்க ரெடியா..

ஒரு அழகான புல்வெளியில் வெட்டுக்கிளி ஒன்று வசித்து வந்தது. அதற்குத் தேவையான உணவு எப்போதும் அதற்குக் கிடைத்து வந்தது. எந்நேரமும் பாடுவதும், ஆடுவதுமாகப் பொழுதைக் கழித்து வந்தது . அந்தப் புல்வெளியின் அருகிலிருந்த ஒரு புற்றில் எறும்பு ஒன்று தன் கூட்டத்துடன் வசித்து வந்தது. வெட்டுக்கிளி எறும்பை சந்திக்கும் ஒவ்வொரு முறையும் எறும்பு ஏதேனும் ஒரு உணவுப் பண்டத்தை சுமந்தபடி சென்று கொண்டே இருக்கும்.

வெட்டுக்கிளிக்கு எறும்பின் இந்த செயல் வேடிக்கையாக இருந்தது. ‘பரந்து விரிந்த இந்தக் காட்டில் உணவுக்கா பஞ்சம்? இந்த முட்டாள் எறும்பு ஏன் எப்போது பார்த்தாலும் உணவை சேமிப்பதிலேயே காலம் கழிக்கிறது? அழகான இந்த வாழ்க்கையை ஆடிப் பாடிக் கழிப்பதல்லவோ இன்பம். இப்படியா வாழ்க்கையை வீணடிப்பது? ‘ என்று அடிக்கடி நினைத்துக் கொள்ளும்.

ஒரு நாள் எறும்பிடம் வெட்டுக்கிளி இந்தக் கேள்வியைக் கேட்டேவிட்டது. எறும்பு சிரித்தபடியே சொன்னது, ‘நண்பா! திருந்த வேண்டியது நானல்ல. நீதான். இதோ கோடைக்காலம் முடியப் போகிறது. உறைபனி வந்து சகலத்தையும் மூடிக்கொள்ளும் காலம் நெருங்கிவிட்டது. அப்போது நீ தேடினாலும் உனக்கு உணவும் கிடைக்காது, உறைவிடமும் இருக்காது. இப்போதே என்னைப் போல உழைத்து உணவு சேகரிக்க ஆரம்பி. உனக்கான ஒரு பாதுகாப்பான உறைவிடத்தை ஏற்படுத்திக்கொள்‘ என்றது.

வெட்டுக்கிளி சிரித்து விட்டது. ‘உன்னைப் போலத் தேவையற்ற காரியங்களை சிந்தித்து, நிகழ்காலத்தின் சந்தோஷத்தை இழந்து போகிற முட்டாளென்றா என்னை நினைத்தாய்?‘ என்றது.

எறும்பு சொன்னது, ‘ நண்பா! இன்னும் காலம் இருக்கிறது. என் வீட்டின் கதவுகள் சாத்தப்படுவதற்குள் நீ மனம் திரும்பினால் என் வீட்டில் கூட உனக்கு இடமுண்டு ‘ என்று சொல்லி விட்டு தன் வேலையைத் தொடர்ந்தது. ‘இந்த ரசனை கெட்ட முட்டாளிடம் பேசியது என் தவறு ‘ என்று வெட்டுக்கிளி ஓய்வெடுத்தது.

கோடைக்காலம் முடிந்தது. உறைபனிக் காலம் துவங்கியது. வெட்டுக்கிளிக்கு அந்தக் குளுமை இன்பமாய் இருந்தது. எறும்பு சொன்னது, ‘ நண்பா! இன்றோடு என்

வீட்டின் கதவுகள் மூடப்பட்டுவிடும். நீ வருவதானால் இப்போது வரலாம் ‘ என்றது. வெட்டுக்கிளி சற்று கோபத்துடனே சொன்னது, ‘ வாழ்க்கையை ரசிக்கத் தெரியாத மூடனே! என் கண் முன்னே நிற்காதே! ‘ என்றது. எறும்பு வேதனையுடன் கதவைப் பூட்டி விட்டு, பனி உள்ளே வராதபடி ஒரு சிறிய இடைவெளியை மட்டும் விட்டு மற்ற இடங்களையெல்லாம் மண்ணால் அடைத்து விட்டது.

வெட்டுக்கிளி கவலைப்படாமல் வயிறு முட்ட சாப்பிட்டு நன்றாகத் தூங்கியது. மறுநாள் பனிப்பொழிவு துவங்கியது. இலைகளெல்லாம் உதிரத்துவங்கின. உதிர்ந்த இலைகளை உறைபனி மூடிற்று. காடு முழுவதும் ஒரு இலைகூட இல்லாதபடி எல்லா இடங்களிலும் உறைபனி. உண்ண உணவில்லை. காடு முழுவதும் சுற்றியும்கூட ஒரு வாய் உணவும் கிடைக்கவில்லை. வெட்டுக்கிளி மிகவும் சோர்ந்து போனது. தலைசுற்றி மயக்கம் வந்தது. படுத்து ஓய்வெடுக்கவும் முடியாது. படுத்தால் பனி மூடிக்கொள்ளும். எறும்பு சொன்னதை நினைத்துக் கொண்டது.

அழக்கூட உடலில் சக்தியில்லை. தட்டுத் தடுமாறியபடியே எறும்பின் வீட்டுக்கதவை பலவீனமாய்த் தட்டியது. வெட்டுக்கிளி கதவைத் தட்டுவது எறும்புக்கு நன்றாகவே தெரிந்தது. இருந்தாலும் மண்ணைக் குழைத்துப் பூசி அடைக்கப்பட்ட கதவைப் பனிக்காலம் முடியும்வரை திறக்க முடியாதே. ‘ நண்பா! நான் எவ்வளவு சொல்லியும் நீ கேட்கவில்லை. உன் துன்பத்தைப் பார்த்தபோதிலும் உனக்கு உதவி செய்ய முடியாதபடி காலம் கடந்து போய்விட்டதே! ‘. என்றபடி உள்ளே சென்று விட்டது.

பசியில் பலவீனப்பட்டுக்கிடந்த வெட்டுக்கிளியைக் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பனி மூடிக்கொண்டது.

அன்பான தம்பி தங்காய்.. உனக்கு கிடைத்திருக்கிற இந்த அற்புதமான விடுமுறை நாட்களை பொக்கிஷமாய் நினைத்து செயல்படு. செல்போனிலும் கணினியிலும் தேவையற்றவைகளை நோட்டமிட்டுக்கொண்டும், அதிக நேரம் விளையாடிக்கொண்டும் இராதே. அது உன்னை அடிமைப்படுத்திவிடும். உன் கண்களையும் மனதையும் பாதித்துவிடுவது மட்டுமல்ல. தேவன் உனக்கு கொடுத்திருக்கிற அழகிய உன் குடும்பத்தை விட்டும் பிரித்துவிடும். ஆகவே எச்சரிக்கையாயிரு.. வருடமுழுவதும் உனக்காக உழைத்த உன் பெற்றோரிடம் அன்பாய் பேசுங்கள்.. சிறு சிறு உதவிகள் செய்யுங்கள்.. அண்ணன் தம்பி, அக்கா தங்கை என யாவரோடும் இணைந்து குழுவாக விளையாடுங்கள்.. ஒருவருக்கொருவர் அன்பை பகிர்ந்து சந்தோஷமாயிருங்கள். எதிர்பாராமல் கிடைத்த இந்த நீண்ட விடுமுறையில் உன் எதிர்காலத்தை பற்றி திட்டமிடுங்கள்.. அதற்கேற்ற நூல்களை வாசித்து அறிவை வளர்த்துக்கொள்ளுங்கள்.. எல்லாவற்றிக்கும் மேலாக குடும்பத்துடன் இணைந்து ஜெபம் பண்ணுங்கள். வேதத்தை வாசித்து சந்தேகங்களை தீர்த்துக்கொள்ளுங்கள்.

எறும்பு கோடை காலத்தில் தனக்கு தேவையானவைகளை சேமித்து வைப்பதை போல, நீங்களும் இந்த கோடை காலத்தில் (விடுமுறை காலத்தில்) ஆரோக்கியமான அறிவையும், அன்பான குடும்ப ஐக்கியத்தையும், தேவனோடு உனக்கு இருக்கும் உறவையும் வளர்த்துக்கொள். நீ எதிர்காலத்தில் ஆசீர்வாதமாயிருப்பாய்..

இந்த கதை நிச்சயமாக உங்களுக்கு பிரயோஜனமாக இருந்திருக்கும் என நம்புகிறேன். இது குறித்த உங்கள் மேலான கருத்துகள் மற்றும் சாட்சிகளை 97503 81784 என்ற எண்ணுக்கு குறுஞ்செய்தி மூலம் தெரியப்படுத்துங்கள். அடுத்த இதழில் உங்களை சந்திக்கிறேன்.. Stay home.. Stay safe.. Stay happy.. Stay healthy.. Byee.

பெண்களுக்கான....

# திரித்துவ வேதாகமக் கல்லூரி

(A Theological Institution of the Tamil District Council of SIAG)
Accredited by Asia Theological Association (ATA)
Kanakkapillaivalasai, Sengottai, Tamilnadu – 627 809

| Course | Duration | Eligibility |
|---|---|---|
| Diploma in Theology (Dip.Th.) - Tamil | 2 Years | S.S.L.C Pass |
| Bachelor of Theology (B.Th.) - English | 3 Years | HSC (+2) Pass |
| Master of Divinity (M.Div.) English | 3 Years | Any Bachelor Degree |

இரட்சிப்பு, ஞானஸ்நானம்,
பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்ற,
ஊழிய அழைப்புடைய 18 வயது நிரம்பிய
பெண்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!
திரித்துவ வேதாகமக் கல்லூரி, மாணவிகள் தங்கி படிப்பதற்கான
சிறந்த, நவீன வசதிகளைக் கொண்டுள்ளது.
அர்ப்பணிப்புள்ள சிறந்த கல்வித் தகுதியுடைய ஆவிக்குரிய,
அனுபவமிக்க ஆசிரியர்களைக் கொண்டு போதிக்கப்படுகிறது.

விண்ணப்பப் படிவங்கள் ஆயத்தமாய் உள்ளன!
பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள்
வந்துசேர வேண்டிய

**கடைசி நாள் : மே 15, 2020**

விண்ணப்பப் படிவங்கள்
நேரில் பெற ரூ.130/- ; தபாலில் பெற ரூ.150/-

தொடர்பு :
The Registrar
**Trinity Bible College**
Kanakkapillaivasai, Post Box No. 25, Sengottai - 627 809
Phone : 04633 - 234243 & 99942 47117



# Calm down during Lockdown

**Rev. பெகின் சாமுவேல்**
(AGCM Director)

ஆண்டவரும் அருமை இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள். பரிபூரண ஜீவன் மின்னிதழ் மூலமாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். சில காரியங்களை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

நாம் இப்போது இருந்து வருகிற இந்த இக்கட்டான சூழ்நிலையினிமித்தம், நமது AGVBSன் பயிற்சிகள் சில மையங்களில் நடத்த இயலவில்லை. ஆகிலும் நாங்கள் சில பயிற்சிமையங்களில் நடைபெற்ற பயிற்சிகளை யூ டியூப்பில் (You Tube) பதிவேற்றம் செய்து வைத்துள்ளோம். எனவே நீங்கள் எந்த நேரத்திலும் அதை பார்த்து பயன்பெறலாம். தற்போதிருக்கும் இந்த லாக்டவுண் நாட்கள் முடிந்த பின்னர் உங்கள் சபைகளில் விடுமுறை வேதாகம பள்ளி நடத்த நீங்கள் திட்டமிடுங்கள். அதற்கு தேவையான எல்லா மெட்டீரியல்ஸையும் நீங்கள் எங்களிடம் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம். இந்த நாட்களில் Online VBS நடத்த தீர்மானித்துள்ளோம். தொடர்ந்து சிறுவர் ஊழியங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

இந்த லாக்டவுண் நாட்களில் நாம் சில அசவுகரியங்களை சந்திக்க நேர்ந்தாலும், சில காரியங்கள் நன்மையாகத்தான் இருக்கின்றது என்ற ஒரு பொதுவான கூற்று அநேகம் பேர் சொல்ல கேட்கிறோம். பிள்ளைகளுக்கு homework, பள்ளி, பாடப்புத்தகங்களிலிருந்து சற்று ஓய்வு, பெற்றோர்களுக்கு பரபரப்பாய் இயங்கின வேலைகளிலிருந்து ஓய்வு. எவ்வித அழுத்தங்களுக்கும் இடமில்லாமல் நிதானமாய் இளைப்பாறுகிற நாட்களாய் இந்த நாட்கள் உள்ளன. பெற்றோர்களாகிய நமக்கும் இந்த நாட்கள் மிக முக்கியமான நாட்கள். ஏனெனில், இதற்கு முன் எப்போதுமே இல்லாததாய் நாம் முழு நேரத்தையும் குடும்பமாய், பிள்ளைகளோடு சேர்ந்து செலவிட முடிகிறது. எவ்வாறு நாம் இந்த நாட்களை பயனுள்ளதாக மாற்றிக் கொள்ளலாம் என்பதைக் குறித்து சில காரியங்களை நாம் பார்க்கலாம்.

### கவனமாயிருங்கள் (Be Alert)

நமது குடும்பத்தின் பாதுகாப்புக்காக நாம் மிகுந்த எச்சரிக்கையாயிருக்க வேண்டிய நாட்கள். சுகாதாரத்தை பேணுவதிலும், பிள்ளைகளை கருத்தாய் கவனித்துக் கொள்வதிலும் மிக எச்சரிக்கையாக இருந்து கொள்ளுங்கள். அதே நேரத்தில் பிள்ளைகள் உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையை கவனிக்கிறார்கள் என்பதையும் நீங்கள் மனதில் கொள்ள வேண்டும். நீங்கள் எப்பொழுது ஜெபிக்கிறீர்கள், வேதம் வாசிக்கிறீர்கள், எப்படி பேசுகிறீர்கள், நடந்து கொள்ளுகிறீர்கள் என்பது உங்கள் குழந்தைகளால் கண்காணிக்கப்படுகிறது. எனவே பெற்றோர்கள் பிள்ளைகள் முன் சண்டையிடுவது, தகாத வார்த்தைகளை உபயோகிப்பது போன்ற காரியங்களை செய்யாதபடி கவனமாயிருங்கள். பிள்ளைகள் ஆசிரியர்களை imitate செய்வதுபோல இப்போது அவர்கள் உங்களை imitate செய்கிறார்கள். So be Alert.

### சுறுசுறுப்பாயிருங்கள் (Be Busy)

எப்போதும் உங்களை சுறுசுறுப்பாக வைத்திருங்கள். இவ்வளவு நாட்களும் உங்கள் வேலைகளில் உங்களை பிஸியாக வைத்திருப்பீர்கள். இப்போது உங்கள்

பிள்ளைகளுக்காக. நீங்கள் செலவிடும் ஒவ்வொரு மணித்துளிகளும் மிகவும் விலையேறப்பெற்றவைகள். உண்மையாகவே அது ஆசீர்வாதமான நேரம். ஏனெனில் அவர்கள் எப்போதும் நம்முடன் இருக்கப்போவதில்லை. உங்கள் பிள்ளைகளுக்காக பணத்தை செலவிடுவதை விட அவர்களுடன் நேரத்தை செலவிடுவதுதான் மிக விலைமதிப்பு மிக்கது. Your children need your presence more than your presents. இந்த நாட்களில் நீங்கள் அவர்களை கர்த்தருக்கு பிரியமானவர்களாக உருவாக்க பயன்படுத்திக்கொள்ளுங்கள். ஒவ்வொரு நாளும் இன்று என் பிள்ளைகளுக்கு நான் கற்றுக்கொடுக்கப் போகிற காரியங்கள் என்னென்ன என்பதை திட்டமிடுங்கள். அவர்களின் வயதிற்கேற்றவாறு வேதாகம புத்தகங்கள், மனப்பாட வசனங்கள், மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாறுகள் என்று கற்றுக்கொடுங்கள். பிள்ளைகள் செல்போன், டி.வி. பார்க்க நேரத்தை திட்டமிட்டு அனுமதியுங்கள்.

### அமைதியாயிருங்கள் (Be Calm)

இவ்வளவு நாட்களும் நீங்கள் மிக பிஸியாக பிள்ளைகளோடு உட்கார்ந்து பேசக் கூட நேரமில்லாதவர்களாய் இருந்திருக்கலாம். அவர்கள் ஆசையாய் கேட்கும் சில காரியங்களுக்கு பதில் கூட சொல்ல முடியாத அளவுக்கு நீங்கள் பல வேலைகளினிமித்தம் depression குள்ளாக இருந்திருக்கக் கூடும். இந்த நாட்களில் அமைதியாக, நிதானமாக இருந்து பிள்ளைகளுக்கு உங்கள் அன்பைக் காட்டுங்கள். எரிச்சலடையாமல், கோபமூட்டாமல், அவர்களுடைய விருப்பங்கள் என்னென்ன என்பதை அறிந்து கொள்ள முயற்சியுங்கள். குடும்ப ஜெபங்களில் அவர்களுக்கு வாய்ப்புக்களை கொடுங்கள். அவர்கள் விருப்பங்களுக்கும் செவி சாயுங்கள். பிள்ளைகளுக்காக அதிக நேரம் ஜெபிக்க இந்த நாட்களில் தீர்மானியுங்கள்.

தேவன் தாமே உங்களையும், உங்கள் பிள்ளைகளையும் பாதுகாத்து, ஆசீர்வதிப்பாராக. ஆமென்.






1. All external rituals in the churches have been stopped.
   POSITIVE SIDE - Religion has to, first of all, become a matter of the heart.
2. All other gatherings are restricted and only families are able to spend much time together.
   POSITIVE SIDE - God wants to strengthen institution of family which is the basic unit of the church.
3. All church events and programs have been cancelled.
   POSITIVE SIDE - God wants us to focus on strengthening our fellowship with Him.
4. All Sunday school activities have stopped.
   POSITIVE SIDE – God wants parents to be more involved with the spiritual growth of their children.
5. All mission field trips are put off.
   POSITIVE SIDE - God wants to strengthen local church leadership more than building a hierarchy.
6. All preaching from the pulpit has been suspended.
   POSITIVE SIDE - God wants His people to hear from Him more directly and receive as they spend time with the Scriptures.
7. All singing with worship bands in church are not happening.
   POSITIVE SIDE - God wants to check whether His people still have a song in their heart.
8. All social services which churches were involved are much less.
   POSITIVE SIDE - God wants to see how much we are concerned about our immediate neighbours.
9. All prayer walks are not possible.
   POSITIVE SIDE - God wants to see how much we are able to be on our knees, interceding for the lost.
10. All offerings bags in church and many fundraising activities are not possible.
    POSITIVE SIDE - God wants us to see if we are sacrificial and consistent in our giving without being prompted to do so.
11. All shaking of hands and physical hugs are banned.
    POSITIVE SIDE - God wants to see whether we care for each other without meeting physically.
12. All kinds of social media activities are on the rise and can be destructive.
    POSITIVE SIDE - God wants to test us to see how disciplined we are with our time and not allow social media to rule our lives.

## வேத வினா போட்டி இல்லை

ஊரடங்கு உத்தரவு நாட்களில் பலர் பதில் அனுப்ப முடியாத காரணத்தால் இந்த இதழில் வேத வினா போட்டி இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

Registered News Paper Regd. No. 8206 / 62

# NOT EVERYTHING IS LOCKED DOWN




Sunrise is not locked down
Love is not locked down
Family time is not locked down
Kindness is not locked down
Creativity is not locked down
Learning is not locked down
Conversation is not locked down
Imagining is not locked down
Reading is not locked down
Relationship is not locked down
Praying is not locked down
Meditation is not locked down
Sleeping is not locked down
Work from home is not locked down
Hope is not locked down
Cherish what you have...
Locked down is an opportunity for many things!
Stay tuned and connected to Heavenly Father!!

## கொரோனா ஆத்திசூடி

அடிக்கடி கை கழுவு
ஆபத்தை அறிந்து கொள்
இல்லத்தில் தரித்திரு
ஈரடி தள்ளி நில்
உற்றாரை ஒதுக்கி வை
ஊரடங்கை மதித்து நட
எங்கேயும் சுற்றாதே



ஏக்கத்தை அடக்கி வை
ஐயமின்றி அனைத்தும் உண்
ஒதுங்கியிருக்கக் கற்றுக்கொள்
ஓரிடத்தில் ஓய்ந்திரு
ஔஷதமில்லை கொரோனாவிற்கு
இஃது அறிதலே இனிய வாழ்வு

BOOK POST

If Undelivered please return to
**PARIPOORANA JEEVAN**
30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 2301165